இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து புரட்டாதி. Sept.. 2013
Free Circulation

# வெற்றிமணி
Vettimaniy

மணி 63 பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. ஓசை 205

Orientalische Textilien & Schmuck
மேலதிக விபரம் 09ம் பக்கம்
Dortmund நகரில் நடைபெறும் வெற்றிமணி விழாவை முன்னிட்டு
அதிரடி மலிவு விற்பனை!
02.9.2013 முதல் 14.09.2013 வரை
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## வெற்றிமணி விழாவில் நம் கலைஞர்களுடன் திரைப்படப் பாடகர் பல்ராம், மாதங்கி, ரோகினி!




Dortmund நகரில்
14.09.2013
சனிக்கிழமை மாலை 5.00






T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52 44137 DORTMUND Tel:0231 819288
மேலதிக விபரம் 13ம் பக்கம்

புதியதோர் தொழில் நுட்பம்! புதியதோர் வாய்ப்பு!!
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 21

Gopara Gnanam ONE DAY SALE
Dortmund நகரில் நடைபெறும் வெற்றிமணி விழாவை முன்னிட்டு
அதிரடி மலிவு விற்பனை! 14.09.2013 மட்டும்
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 10ம் பக்கம்

உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும் , இல்லங்களிலும்
ஐங்கரன்
கலைஞர் JAYA TV
தொலைபேசி இல. 0044 208 543 43 22
Ayngaran foods
30 High Street Colliers Wood,
Colliers Wood
London, SW19 2JE- U.K
ayngaran.com
AYNGARAN

மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Kipper str.Tor.3- 44147 Dortmund
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
டோட்மூண்ட் நகரில்
Dortmund நகரில் நடைபெறும் வெற்றிமணி விழாவை முன்னிட்டு
மாபெரும் அதிரடி மலிவு விற்பனை!
02.9.2013 முதல் 14.09.2013 வரை
மாபெரும் ராஜமுத்திரை
மேலதிகவிபரம் 19ம் பக்கம்
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
11th ANNIVERSARY
Mr.P.Sritharan. Proprietor
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

Jewellers & Silk House
London's Largest Selections
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
Rathy ரதி
28 Ealing Rd
Wembley
HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road
tooting sw19 7gt
0208682 2233




## தட்டச்சு இயந்திரம் Type Writer



நாம் சிறவர்களாக இருந்த காலத்தில் பாடசாலைக் கொப்பிகள் புத்தகங்களுக்கு பிறவுண்பேப்பரில் உறை போட்டு அதன்மேல் பெயர் எழுதி வைப்போம்.
அதனை இன்னும் அழகாக வைத்திருக்க முனைபவர்கள் ஆசிரியர் ரைப்றைட்டரில் ரைப்பிங் செய்யும் போது கெஞ்சி மன்றாடி ஒருமாதிரி எங்கள் பெயரையும், அடிப்பித்து அதனை வெட்டிக் கொப்பிகள் புத்தங்கள் எல்லாம் ஒட்டுவோம்.
அன்று வினாத்தாள் மற்றும், உத்தியோகபூர்வமான கடிதங்கள், ஏன் எங்கள் பிறப்பத்தாட்சிப்பத்திரங்கள் யாவும் இந்த ரைப்றைட்டரில் அடித்தவைதான்.
முதலில் ஆங்கிலத்தில் இருந்த இந்த ரைப்பறைட்டர் தமிழ் எழுத்துக்களுடன் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு இலங்கை வந்து சேர்ந்தது.



### தமிழ்தட்டச்சு இயந்திரம்

2010 இல் நான் மலேசியா சென்றபோது, அங்கு எனது சித்தப்பாவின் கணனி என்று, ஒன்றைக் காட்டினார்கள்.
அதுவேறு ஒன்றும் இல்லை. அதுதான் தமிழ் தட்டச்சு இயந்திரம். சின்னம்மா சித்தப்பா இருவரும் ஆசிரியர்கள் அதனால் வினாத்தாள் தயாரிக்க 1960 வாங்கியதாக சொன்னார்கள். அதனை உடன் படம்பிடித்தேன்.
கறுப்பு,சிவப்பு நிறங்களில் எல்லாம் அடிக்கலாம். ஒரு கறுப்பு சிவப்பு இரண்டும் கலந்த ஒரு நாட எழுத்துக்கள் துள்ளிவந்து அடிக்கும் இடத்தில் இருக்கும். அந்த நாடாவிற்குப்பின் கடுதாசி இருக்கும். ஒவ்வொரு வரி முடிந்த பின்னும் இடப்பக்கத்தில் இருக்கும், குமிழைச் சுற்றி அடுத்த வரிக்குரிய இடத்தில் கடுதாசியை நிறுத்த வேண்டும். சிவப்பு நிறத்தில் முக்கிய குறிப்பு அடிப்பதற்கு, அடியில் உள்ள ஒரு விசைத் தட்டை அமத்திப்பிடித்துக் கொண்டு சிவப்பு நாடா தமிழ் எழுத்து அடிக்கும் இடத் திற்கு நேராக உயர்ந்து நிற்கும் நிலைக்கு கொண்டு வந்து அடிக்கவேண்டும்.

மற்றும் தமிழ் எழுத்து அடிப்பதற்கு அன்று ஒருவிதி முறை இருந்தது. இரண்டு கைகளாலும் விசைப்பலகையில் உள்ள தமிழ் எழுத்துக்களை, அந்ததந்த எழுத்துக்குரிய பிரத்தியேக விரல்களால் தட்டி தட்டி எழுதவேண்டும். தட்டி தட்டி எழுதுவதால் இதற்கு தட்டச்சு இயந்திரம் எனப்பெயர் வந்தது. இப்போ கணினியின் பயன்பாடு வந்தபின் இந்த இயந்திரம் முற்றாக மறைந்துவிட்டது.

அன்றுபோல் இன்று விசைத்தட்டில் விரல்கள் அடிப்பதற்கு எந்த விதிமுறையும் கிடையாது. எப்படி வேண்டுமானாலும் அவரவர் சௌகரியப்படி அடிக்கலாம். இன்று எதற்குத்தான் விதிமுறைகள் உண்டு?

இப்போது கணனியில் அடித்து மின்னஞ்சல் செய்யும் கடிதங்கள், முக்கிய கோப்புக்கள் எல்லாம் திருட்டுப் போகக்கூடிய அளவிற்கு வந்தவிட்டது. இதனால் அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள், தங்கள் முக்கிய ஆவணங்களை மீண்டும் தட்டச்சுமுறையில் அடித்து வைக்க யோசிக்கின்றன.

காலத்தால் இந்த தட்டச்சுயந்திரம் மறைந்துபோனாலும், அதனால் உருவாக்கப்பட்ட பிறப்பத்தாட்சிப்பத்திரம் மற்றும் அரசியல்ரீதியான பல முக்கிய ஆவணங்கள் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் உள்ளன. மீண்டும் ஒரு காலத்தால் கரைந்த பொருளுடன் சந்திக்கின்றேன்

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்


Tel.: 0201/236925
Fax: 0201/236928
இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...
Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!
APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN


மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்
இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்
Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524



Bielefeld நகரில்.... 3 in one
Lakshmi Jewellery &Silks
தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்
Lakshmi Jewellery &Silk
பழைய பவுணுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!
Asia super markt
திங்கள்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை
பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம் மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்
Wilhelm Str.09
33602 Bielefeld
தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de
Tel:0521 4283 510

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de

Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013

## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
————————————கவிஞர்.வி.க


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0157 88 77 31 56

e-mail: vettimaniy@hotmail.com


QB 830

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)




# வடக்கில் தனிக்குடி, கூட்டுக்குடி, அதிகரிப்பு! தமிழ்க் குடிமக்களின் கௌரவம் பாதிப்பு!



## அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு!

தனிக்குடும்பம் கூட்டுக்குடும்பம் என்று பொருள் அல்ல இந்தத் தனிக்குடி, கூட்டுக்குடி, என்பதன் அர்த்தம்.
தனியாகவும் கூட்டாகவும், மது அருந்தும் வழக்கம், இன்று இளையவர் முதல் முதியவர் வரை வடக்கில் வளர்ந்துள்ளது. முன்பு பெரும்பாலும் கிராமங்களில் கள்ளுக் குடிப்பார்கள், பட்டணத்தில் அதிகமாக சாராயம் அடிப்பார்கள். கிரமங்களிலும், அங்காங்கே இருந்ததுதான். ஆனால் இன்று பட்டணம், கிராமம், எல்லாம் கைகோர்த்து ஒன்றாகக்குடிக்கின்றார்கள். இதில் கற்றவர் கல்லாதவர் என்ற வேறுபாடுகிடையாது. இவர்களது செயலால் முதலில் பாதிக்கப்படுவது குழந்தைகளே.
பெற்றோர்தான் குழந்தைகளின் கதாநாயகர்கள். அவர்கள் குழந்தைகள் முன்னிலையில் அரங்கேற்றும் தீய செயல்கள் அவர்களுக்கு தீராதிதீர விளையாட்டாக மனங்களில் பதியும்.
பொருட்களை விற்று குடித்து வீதிக்குவருபவர்களும் உண்டு. அவர்கள் விதி வீதிக்கு வந்தாலும் விடாது. அதனால் களவு, விரோதம், சண்டை, சச்சரவு என வளர்ந்துகொண்டே செல்லும்.
மூக்கில் கைவைக்காதீர்கள். மாதம் பத்தாயிரம் முதல் ஒரு லட்சம் வரை குடிக்குசெலவு செய்பவர்கள் உண்டு. இவர்கள் பெருங்குடிமக்கள் அல்ல. சாதாரணமக்களே. இவர்களுக்கு பக்கத்துணையாக இருந்து உதவிபுரிபவர்கள் வேறுயாருமல்ல நாமும்தான்.
நாம் ஏதோ இங்கு நன்றாக இருக்கிறோம், அங்கு அவர்கள் நிலை கஷ்டம் என்று எண்ணி எண்ணி இங்கு சிறுக்கச் சிறுக்க மிச்சம்பிடித்து அவர்களுக்கு உதவினால், ஒருசிலர் அதனை போதைக்கு செலவு செய்கின்றார்கள்.
அதுமட்டுமல்ல இந்தக் கோடைகால விடுமுறையைக் கழிக்கசென்ற சிலர் அங்கு இருக்கும் இளசுகள் முதல் முதியவர்வரைக்கும், மது விருந்துவைத்து மகிழ்ந்துள்ளனர். இதில் சிரிப்பு என்னவென்றால் "மது அருந்துதல் தப்பு என்ற எண்ணமே விட்டுப்போச்சு"- அருந்தாதவரை ஒருமாதிரிப்பார்க்கும் காலமாப்போச்சு.

மதுவை மருந்துபோல் பாவித்தால் மருந்து, அதனை அளவுக்குமேல் பாவித்தால் அருவெருப்பு. "அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு". புலம்பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர்கள் குடிக்கிறார்கள்தான். ஆனால் பெரும்பாலானவர்கள் மருந்தாகவும், சிலர் வீட்டில் அளவாகவும் அருந்திதுவிட்டு அமைதியாக இருப்பார்கள். இவர்களால் எவருக்கும் கேடு விழைவதில்லை.

ஆனால் அங்கு நிலைவேறு. அந்தச்சூழலில் குடிப்பவர்களால் மாணவர்கள், மாணவிகள் பாதிக்கப்படுகின்றனர். இளம் மாணவிகள் அச்சத்துடன் நடமட வேண்டியுள்ளது. இன்று யாழ்மண்ணில் அதிகரித்திருக்கும் இக்குடிப் பழக்கத்தை அரசால் நிறுத்த முடியும் என எதிர்பார்க்க முடியாது.
பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், இந்த மது எதிர்ப்பினை, பிரச்சாரமாக அல்லாமல், அதன் தீயவிழைவுகளை விளக்கும் முகமான செயற்பாடுகளாகச் செய்தல் வேண்டும்.

கடந்த மாதம் வெளிவந்த தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிட்ட "அருள் ஒளி" மாதாந்த சஞ்சிகையில் "இளைய தலைமுறையைக் காப்பதற்கு இரக்கமுடன் சிந்தியுங்கள்"- என்று தலைப்புச்செய்தியாக ஆசிரியர் கட்டுரை இடம்பெற்றுள்ளது. அதில் ஆலயங்கள் தோறும் நற்சிந்தனைகள் போதிக்கவேண்டும்.
அன்று கல்வியில் முன்தங்கியிருந்த யாழ்ப்பாணம். இன்று பின்னோக்கிச்செல்வதற்கும், இன்றைய சூழலேகாரணம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

எனவே புலம்பெயர்ந்து வாழும் நாமும், அங்கு உதவிகள் புரியும்போது இடம் பொருள் காலம் தேவை அறிந்து உதவுதல் வேண்டும்.

அங்கு ஒருவன் கெட்டு அலைந்தால், அங்குள்வர்களைக் குறைசொல்வது கிடையாது. உடனே "வெளிநாட்டில் இருக்கும் அவன் அண்ணன், அல்லது மாமன், செல்லம் கொடுத்து கெடுத்துப்போட்டான்" என்றே அங்கு பேசுகிறார்கள்.
இன்று விலைவாசி அங்கு வானைத்தொட்டு உள்ள நேரம், சிக்கனமாகவும், தேவையற்ற போதைகளுக்கு அடிமையாகாமலும், மாணவர்கள் உருவாக ஆசிரியர் பெற்றோர் பெரியவர்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும். நாமும் தேவையறிந்து உதவவேண்டும்.






# மதுரை மாநகரில் பைரவன்

"பைரவன்" இசை ஆல்பத்தின் வீடியோ பதிவுக்காக சென்னை டி.பி.பி இசைக்குழுவினர் மண்ணின் அடையாளமான மதுரை நகருக்குச் சென்றிருந்தார்கள். "பூப் பூக்கும் மல்லிக் கண்ணாலே, மீனாட்சி போலொரு பொண்ணால" எனும் அதிரடிப் பாடலும், "முகிலே முகிலே உனைப்போல் என மிதக்கச் செய்வாயா ?" எனும் மென்மையான பாடலும் படமாக்கப்பட்டன.

"பூப்பூக்கும் மல்லி" பாடலில் சஞ்சேயுடன் சேர்ந்து மதுரை நடனக் கலைஞர்கள், நாட்டியப் பெண், நெருப்பு விளையாட்டு வீரர் என பலரும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முகிலே முகிலே பாடலில் சஞ்சோதா எனும் இளம் பெண் நடித்திருக்கிறார்.. இசை இயக்குனர் சஞ்சே அவர்களுடன் டி.பி.பி சென்னை குழுவினரான ஷாலினி, முருகேஷ்வரி, சேவியர் மற்றும் சில நண்பர்களும் இந்த பயணத்தில் இடம்பெற்றிருந்தனர். மதுரை மீனாட்சியம்மன் கோயில், அணைக்கட்டி அணை, தேனி மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் உள்ள இடங்களில் பாடல்கள் படமாக்கப்பட்டன. மைனா திரைப்படம் படமான குரங்கணி மலைப்பகுதியில் படமான முகிலே முகிலே பாடல் விழிகளை வியக்க வைக்கும் என்பது நிச்சயம்.டி.பி.பி வீடியோக்களின் வரிசையில் சில அதிர்வுகளை இந்த வீடியோ பாடல்கள் ஏற்படுத்தும் எனும் நம்பிக்கையை இந்தப் பயணம் உருவாக்கியிருக்கிறது.



## சிரிக்க மட்டும்!

## மனைவி இருக்கப் பயம் ஏன்?

டாக்டர் கணவன் உடம்பை பரிசோதித்துவிட்டு "இன்னும் 8 மணி நேரம் தான் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள் அதற்குள் உங்களுக்கு பிடித்ததை எல்லாம் செய்துவிடுங்கள்"

மாலை 5 ஆ . கண்ணீர் மல்க மனைவியிடம் செய்தியை பகிர்ந்தான் அவன். துடித்தாள் அவள் ...

எனக்கு உன் கையால ரவா தோசையும் வெங்காய சட்னியும் குடும்மா இன்னும் 7 மணி நேரம் தான் பாக்கி ......

மாலை 7 மணி : ராத்திரி சாப்பாட்டுக்கு உன் கையால மீன் குழம்பு வச்சு குடும்மா இன்னும் 5 மணி நேரம் தான் நான் இருப்பேன்...

இரவு 10 மணி : நல்ல பசும் பால்ல உன் கையால பாதாம் அரைச்சு கொஞ்சமா சர்க்கரை போட்டு குடு - இன்னும் மூணு மணி நேரம் தான் இருக்கு ..

**இரவு 12 மணி : தூங்கும் மனைவியை எழுப்புகிறான் ...**

அவள் : பேசாம படுங்க - காலைல எழுந்த உடன் எனக்கு ஆயிரம் வேலை கெடக்கு, சொந்தக்காரங்களுக்கு சொல்லி அனுப்பணும், அய்யர் ஏற்பாடு பண்ணனும், சுடுகாட்டுல booking பண்ணனும் , உங்களுக்கு எழுந்திருக்கற வேலை கூட இல்ல

# அம்மா சொன்னவ..



ஒரு வயதுக்குப்பின் பிள்ளைகள் அடிக்கடி சொல்லும் வார்த்தை அம்மா சொன்னவ அம்மா சொன்னவ என்பதே! அம்மா சொன்னதைப் புரிய காலம்தேவை! சட்டெனப் புரியாது.

அம்மா இன்று 92 வயதைக் கடந்துவிட்டா.

இப்போது உணவு உண்பது கடினம் தொண்டைக் குழிக்குள்ளால் இறங்குவது பெரும்பாடு. அம்மா முதுமை எப்படி என்று கேட்டால் சுருக்கமாக விளக்கம் சொல்வா. "உடம்பு எங்களைக் காவிக் கொண்டு திரிந்தது இளமை. உடம்பை நாம் காவிக்கொண்டு திரிவது முதுமை." எவ்வளவு உண்மை.

ஒருநாள் அண்மையில் அம்மாவுடன் நிற்கும்போது, நல்ல மரக்கறி மதிய உணவு. பார்க்க ஆசையாக இருக்கும். ஆனால் அம்மாவிற்கு முன்னால் இருந்து உண்டால் அம்மா பாவம், அவ உண்ணக் கஷ்டப்படும் நேரம், எப்படி நான் மட்டும் அவவுக்கு காட்டிக்காட்டி, உண்பது என்று நினைத்து, வேறு அறைக்குள் ஒளித்து நின்று உண்டேன்.

அம்மாவிற்கு பிள்ளைகளின் அசைவு நன்கு தெரியும். வயிற்றுக்குள் நாம் இருக்கும்போதும் வெளியில் வந்தபின்பும், இந்த அசைவுகளை அம்மா இலகுவாகவே உணர்ந்துகொள்வா!

என்னைக் கூப்பிட்டா, " என்டா சாப்பிடுகின்றாயா? இதில் எனக்குப்பக்கத்தில் இருந்து சாப்பிடு நான் பார்க்கவேண்டும்" என்றா. சரி என்று யோசனையுடன் அம்மா பக்கம்சென்று சாப்பிட்டேன்.

ஒவ்வொரு கறியாகக் கேட்டா! இது என்ன வாழைக்காய் பொத்தி வறையா. இது நல்லது உடம்புக்கு. அட இது என்ன பூசணிக்காயா! அட முருக்கங்காய் குழம்பு. ஏன் அதற்குள் நாலு பிலாக்கொட்டையைப் போட்டு வைத்திருக்கலாமே! பருப்பு என்ன பயறோ, அல்லது மைசூர்பருப்போ. நான் பயறு என்றேன். அட அதற்குள் கொஞ்சம நல்லெண்ணைவிட்டு சாப்பிடு. சோற்றைக் குறைத்து, கறிகளை அதிகமாகப்போடு. என்று இரசித்தபடியே எனது கோப்பையைப் பார்த்தபடி இருந்தா!

அம்மாவால் பருப்புகறிகூட விழுங்கமுடியாத நிலை. எனக்கு அம்மா அருகில் இருக்க நான் மட்டும் பந்தியில் சாப்பிடுவதுபோல் சாப்பிட என் மனம் சம்மதிக்கவில்லை.

என்முகத்தைக் கவனித்த அம்மா, என் மனதை அப்படியே உச்சரித்தா. அட நான் சாப்பிட முடியாது! ஆனால் உன்னால் முடியுமல்லவா. நீ சாப்பிடுவதைப் பார்த்தால் எனக்கு வயிறு நிறையும்.

இது உண்மையான சொல். எனக்கு அப்படித்தான் இப்ப நிறைகிறது. அம்மா மேலும் விளக்கமாகச் சொன்னா,

"எனது அமிர்தம் அக்காவிற்கு 3வது குழந்தை பிறந்தநேரம்.

அப்போ நான் அங்கு நின்றேன். அக்கா அதிகம் தண்ணீர் குடித்தால் வயிறுவைத்துவிடும். அதனால் அந்த நேரம் தண்ணீர்குடிப்பதைக் குறைக்கவேண்டும். கொழுத்தும் வெய்யில் தண்ணீர் விடாய் அதிகமாக இருக்கும். அதனால் தன் பிள்ளைகளைக் கூப்பிட்டு தனக்கு முன்னால் செம்பில் நீரெடுத்துக் குடிக்கும்படி சொல்லுவா. அக்காவிற்கு தண்ணீர் விடாய் போய்விடும். அப்ப புரியாதது எனக்கு இப்புரியுது. டேய் எனக்கு முன் இருந்து சாப்பிட என்வயிறு நிறைந்தமாதிரியும், உடம்பில் பலம் வந்தமாதிரியும் இருக்கு என்றா என் அம்மா.

தொலைக்காட்சி பெட்டியில் வைத்தியக்குறிப்பில் கேட்கும் கேள்விகளுக்கு டாக்டர் பதிலளித்துக்கொண்டு இருந்தார்.

ஒரு பெண் டாக்டரிடம் "சென்ற தடவை உங்களிடம் கேட்டேன். எனக்கு ஒரு சத்திர சிகிச்சை வயிற்றுக்கடியில் செய்த பின்பு, சலம்போவது கஷ்டமாக உள்ளது", என்று.

அதற்கு டாக்டர் "பைப்பில் தண்ணீரை திறந்து விட்டுவிட்டு செய்து பார்க்கவும்" என்றார்.

எனக்கு " நீங்கள் சொன்னபடி செய்ய" உடன் சுலபமாக வந்தது. நன்றி தங்கள் அறிவுரைக்கு என்றார்.

நான் அம்மாவைப் பார்த்தேன். அம்மா சொன்னா "ஒவ்வொருவர் உடம்புக்குள்ளும் ஒரு டாக்டர் இருக்கிறார்". அவர் சொல்வதை செய்தால் பாதிவருத்தம் நீங்கிவிடும் என்று.

உண்மைதான். அன்போடு மனதை ஒரு நிலையில் குவிக்க எங்கள் உடலில் சக்திபிறக்கும். பிள்ளை உணவு உண்டால் தாய்வயிறு நிறையும், என்பது அன்பைக்காட்டும் வார்த்தை மட்டுமல்ல. அந்த அன்புக்கு விஞ்ஞானரீதியாகவும் மகத்துவம் உண்டு.




KIOSK & ASIAN MARKT

Lebensmittal

பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும்
கிடைக்கும்.

Tel:02332 50 97 568

Hagener Str.158
58285 Gevelsberg

உரிமையாளர்:
த.மனோகரன்

ASIJAH EUROPE

Tel: +31 511 76 00 06
Tel: +31 511 76 00 07
Fax: +31 511 76 00 08
Mobile: +31 6 12 17 55 99

புதிய முகவரி:
VOORSTRAAT 32
9291 CK KOLLUM
THE NETHERLANDS

Email: info@asijah.com
Email: asijaheurope@hotmail.com




ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.

Web: asijah-europe.com


Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013




## கையில் காசு இல்லாத காமராஜர்



டெல்லியில் உலகக் கண்காட்சி நடந்த சமயம் , அதன் துவக்க விழாவுக்கு அன்றைய பிரதமர் நேருவுடன் காமராஜரும் சென்றிருந்தார் . தற்பொழுது பேரூந்து நிலையங்களிலும் இரயில் நிலையங்களிலும் வெகு சாதாரணமாகக் காணப் படுகிற எடை பார்க்கும் எந்திரம் அந்தக் கண்காட்சியில் அறிமுகமாகியிருந்தது . நேரு எந்திரத்தில் ஏறி நின்று . காசு போட்டு எடை பார்த்தார் . மத்திய அமைச்சர்கள் பலரும் அவ்வாறே செய்தனர் ... காமராஜர் மட்டும்சற்றே ஒதுங்கி நின்றிருந்தார். நேரு அவரையும் எடை பார்க்கும்படி கட்டாயப் படுத்தினார் . அவரோ மறுத்துவிட்டார். சுற்றி நின்றிருந்தவர்களுக்கு ,திகைப்பு பிரதமர் சொல்லியும் காமராஜர் மறுக்கிறாரே என்று .அப்பொழுது நேரு சொன்னார் ” காமராஜர்எதற்கு மறுக்கின்றார் என்று எனக்குத்தெரியும் , இந்த எந்திரத்தில் ஏறி நின்று போடும் காசு கூட இபொழுது இவரிடம் இருக்காது ” ,என்றார் பிறகு ,காமராஜருக்கு தானே காசு போட்டு எடை பார்த்தார்.

## வேறு யாருக்கும் தைரியம் கிடையாது!

நேதாஜி

நேதாஜி அவர்கள் முதல் முறையாக ஹிட்லரை சந்திக்க சென்ற பொது ஹிட்லருடைய ஆட்கள் நேதாஜியை ஒரு அறையில் உக்கார வைத்தனர் . நேதாஜி அவர்கள் ஒரு புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விட்டார் . ஹிட்லருடைய ஆட்கள் ஹிட்லருக்கு தெரிவிக்க சென்றனர் .





ஹிட்லர் போன்ற வேடமணிந்த பலர் வந்தபோதும் நேதாஜி கண்டுகொள்ளாமல் படிப்பதை தொடர்ந்தார் . இதில் என்ன விஷயம் என்றால் பல சமயங்களில் ஹிட்லர் போன்ற வேடமணிந்தவர்களை கண்டு பல மனிதர்கள் தாங்கள் ஹிட்லரை சந்தித்தாக சொல்லியிருக்கிறார்கள்..
கடைசியில் ஹிட்லரே வந்து நேதாஜியின் தோளில் கை வைத்தவுடனே நேதாஜி அவர்கள் ”ஹிட்லர் ” என்றார் . ஹிட்லருக்கு ஒரே வியப்பு...
ஹிட்லர் நேதாஜியிடம் ” எப்படி நீங்கள் என்னை கண்டுபிடித்தீர்கள் இதற்கு முன் நீங்கள் என்னை சந்தித்தது கிடையாது ” என்று கேட்டார்.
நேதாஜி அவர்கள் ”இந்த உலகத்தில் சுபாஷ் சந்திர போசின் தோளில் கை வைக்க ஹிட்லரை தவிர வேறு யாருக்கும் தைரியம் கிடையாது” என்றார்...!

## பெண்ணின் மூளை - இந்த மண்ணில் எவர்க்குண்டு!

### கனக்ஸ்

மனித மூளை கட்டிளமைப் பருவத்திலே தான் முழுமையான விருத்தியடைகிறது. 20 வயதிற்க்குப் பின்னர் அது படிப்படியாக பரிமாணத்தில் சுருங்கிக் கொண்டு போகிறது. மூளையின் பருமனோ, அது சுருங்கும் வேகமோ ஆளாளுக்கு வித்தியாசமா அமைந்தாலும் ஒவ்வொரு பத்தாண்டினுக்கும் 10 வீதம் நரம்புக் கலங்கள் அழிந்து விடுவதாகக் கருதப் படுகின்றது. சிந்தித்தல், திட்டமிடல், ஞாபகம் ஆகிய வற்றுடன் சம்பந்தப் பட்ட மூளையின் பகுதியாகிய நுதற் சோணையும், கன்னச் சேணையுமே கூடுதலாகச் சுருங்குதலுடன் சம்பந்தப் பட்டுள்ளன எனக் கூறப் படுகிறது.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, மூளையின் சுருங்கும் வேகம் பெண்ணிலும் பார்க்க ஆணுக்குப் பன் மடங்கு அதிகம். ஏனோ?

இன்டியானா பல்கலைக்கழகத்தைச் செர்ந்த பேராசிரியர் Joseph. T. Lorito ஆண், பெண் மூளையின் தொழிற்பாடு பற்றிய இன்னொரு அவதானத்தையும் கூறியுள்ளார். அதன்படி ஆண்கள் செவி மடுக்கின்ற போது ( listening) தமது இடப் பக்கத்து மூளையையே பெரும்பாலும் உபயோகிக் கின்றனர், பெண்கள் இருபுறத்து மூளையையும் ஒரே சமயத்தில் உபயோகிக்கின்றனர் என்கிறார். இதன் காரணமாகவே பெண்கள் ஒரேசமயத்தில் இரு சம்பாஷணைகளைச் செவிமடுக்க முடிகிறது என்கிறார் லொறிற்ரோ.

பிள்ளை, கணவன், மாமன், மாமி எல்லோர் பேச்சையும் செவிமடுத்துப் பதிலிறுக்கும் அஷ்டாவதானியான சிறந்த இல்லத் தலைவியாய் பெண் இருப்பதன் காரணம் புரிந்ததா? இரு புறத்து மூளையையும் நரம்பிழையத் தினால் ஆனபாலம் ஒன்று இணைக்கிறது



அது வன்சடலம் ( Corpus )Callosum) எனப்படுகிறது. பேச்சின் சில அம் சங்கள், இடம் பற்றிய உணர்வு போன்ற வற்றுடன் சம்பந்தப் பட்ட இந்த வன்சடலம் ஆண்களிலும் பாரக்கப் பெண்களில் நன்கு விருத்தி யுற்றிருப் பதாக மக்மா ஸ்ரர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா சிரியர் சாணறா விற்றில்சன் (Sandra Witleson) கூறயுள்ளார்.

ஏன்? ஞாபகசத்தி பற்றிக் கூட ஃபுளோறிடா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த றொபின் வெஸ்ற் எனும் பேராசிரியர் ஞாபகசத்தியைப் பொறுத்த மட்டிலே பெண்களுக்கு நம்பிக்கையிலும் பார்க்கத் திறன் அதிகம். ஆண்களுக்குத் திறனிலும் பார்க்க நம்பிக்கை அதிகம் என்கிறார்.

ஒரு பொருளை வீட்டிலே வைத்து விட்டுப் பின்னர் பல கணவன்மார்கள் மனைவியரைத்தான் வறுத் தெடுப்பது நமது வாழ்வியலில் சர்வ சாதாரணமே. கண்டு பிடித்துக் கொடுக்கும் திறன் அவர்களுக்கு உண்டு என்பதே பேராசிரியரின் ஆராச்சி முடிவு.

பெண்கள் எப்பொழுதுமே அனுசரணையாக வாழ்வதன் நிமித்தம் பெற்ற அனுபவமே இதற்குக் காரணம் என்கிறார் பேராசிரியர்.

இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை“ எனச் சும்மாவா கூறினார்கள்.


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



# பண்டித மணியும் சிவத்தமிழ்ச் செல்வியும்.




**சைவத்திரு. கா. சிவபாலன்**

கடந்த 19ம் நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றிய பெருமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுசூமுக நாவலர் பெருமான். நூலவரைப் போன்று பிரமச்சரிய விரதம் பூண்டு தொண்டாற்றியவர்களில் பண்டிதமணி அவர்களும், சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்களும் என்பதைக் குறிப்பிடலாம். இவர்கள்இருவரும் நாவலர் பெருமான் மீது அதி உயர்ந்த பற்றுதல் கொண்டவர்கள். நாவலர் தர்மத்தையும் நாவலர் நீதியையும் இன்றைய சமுதாயத்துக்கு சிந்திக்க வைத்தவர்கள். சமுதாயத்தை சிந்தித்த இவர்கள் இருவரினதும் வாழ்வும் பணியும் தனித்தனியாக ஆராயப் படத்தக்க விடய பரப்புடையவர்களாகும்.



நாவலர் வழிவந்த பண்டிதமணி அவர்களையும் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரையும் சந்திக்கும் பேறு எல்லோருக்கும் கிடைப்பது அரிது. புண்டிதமணியைச் சந்தித்தவர்கள் சிவத்தமிழ்ச் செல்விை அவர்களைச் சந்திக்கவில்லை. சிவத்தமிழ்ச் செல்வியைச் சந்தித்தவர்கள் பண்டிதமணி அவர்களைச் சந்திக்கவில்லை.

பண்டிதமணி அவர்களின் தொடர்பு என்அறிவு வெளிப்பட்டு அந்த மகானைச் சந்தித்த நாள் முதல் இறுதிநாள் வரை அன்னாரின் பணிகளையும் நூல் களையும் பல கட்டுரைகளையும் எழுத்தெண்ணிப் படித்து இருக்கிறேன். இவற்றினால் தான் தமிழைப் பெற்றேன்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் இறுதிக்காலம் வரையுள்ள முப்பது ஆண்டுகள் அவாகளின் சைவப் பிரசங்கங்களைக் கேட்டும், அவர்கள் தன்னிகரில்லாத் தனிப்பெருந்தலைவராக அமர்ந்து தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் கோவிலை நடாத்தி மகாசக்தி வாய்த துர்க்கை அம்பாளின் பெருமைகளையும் பெரும் புகழையும் சர்வதேச சமூகத்தின் முன்பாக நிலைநாட்டி நிதி நிர்வாக தலைமைத்துவத்தின் கீழ் தொண்டாற்றி பெறும்பேறு பெற்றேன்.

இதனால் சைவாலய டபரிபாலனத்தைக் கற்றுக்கொண்டேன். இவர்களுடைய தொடர்பு பூர்வ புண்ணிய பேறு என்றே கருதுதகின்றேன்.

பண்டிதமணியைச் சந்தித்த தழிழருவி ச.சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் ஒரு நாள்உரையாடலின் போது சிவத்தமிழ்ச் செல்வி பற்றி ஒரு வினாவும்கொடுத்து விடையும் பின்வருமாறு கூறினார். “யாழ்ப்பாணத்து நல்லை சுவாமிநாதத் தம்பிரானின் கதாப்பிரசங்கமும், சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் சொற்பொழிவும் ஏன் தமிழ்நாட்டில்எடுபடுகின்றன என்றால், முதலாவது இவர்கள் இருவர் பேச்சிலும் பொருளை ஒழுங்குபடுத்திப் பேசுதல், இரண்டாவது கால நேரத்தை உணர்ந்து கட்டுப்பட்டுப் பேசுதல், மூன்றாவது யாழ்ப்பாணத்து தமிழின் தனிச்சிறப்பு, நான்காவது ஒரு எழுத்தையும், ஒரு சொல்லையும் சிதையாது விழுங்காது உச்சரித்தல் என்பர் பண்டிதமணி அவர்கள்.

1899ஆம் ஆண்டு பிறந்த பண்டிதமணி அவர்களும் 1925ம் ஆண்டு பிறந்த சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரும் தமிழ் மொழியை முறையாக எழுத்தெண்ணிக் கற்றுக் கொண்ட பண்டிதமணியும் பண்டிதையும் நாடறிந்த தமிழ் அறிஞர்கள்

சிவத்தமிழ்ச் செல்வி பற்றி பண்டிதமணி அவர்கள் பல்வேறு தமிழ் சமய விழாக்களிலும், பாராட்டத் தவறுவதில்லை. மேலும் 1971ஆம் ஆண்டு அம்மையார் மலேசியா, சிங்கப்பூர் பயணம் செய்து சிவத்தமிழ் தூது செய்த 27 சொற்பொழிவு நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையிலும், 1981ஆம் ஆண்டு துர்க்காதேவி மகா கும்பாபிஷேக மலருக்கு வழங்கிய வாழ்த்துரையிலும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் நடாத்திய சென்னை சைவசித்தாந்த சமாச பவள விழாவுக்கும் வாழ்த்திய வாழ்த்துரைகள் பண்டிதமணி அவர்கள் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் பணிகளுக்கு மகுடம் வைத்தமையை அறிந்து கொள்ளலாம்.

பண்டிதமணி அவர்கள் மீது கொண்ட பெருமதிப்பை சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள் பாராட்டிப் போற்றத் தவறுவதில்லை. யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிலும் நடைபெறுகின்ற சான்றோர் வரிசையில்” என்ற நூலில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள்” என்றொரு அத்தியாயம் எழுதியுள்ளார். மேலும் இந்நூலில் மாதகல் நுணசை முருகன் கோவில் மகோற்சவ தொர் சொற்பொழிவைப் பாராட்டி தமக்கு பண்டிதமணி அவர்கள் “செஞ்சொற் கொண்டல்” என்னும் பட்டம் வழங்கிய செய்திகளையெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

1986ஆம் ஆண்டு பண்டிதமணி அவர்கள் சிவபதம் அடைந்தபோது திருநெல்வேலி கலாம்ணடபத்தில் நிகழ்த்திய அஞ்சலிப் பேச்சு அனைவரையும் கண்கலங்க வைத்தது. மேலும் 1988ஆம் ஆண்டு “மட்டுவில் தந்த பண்டிதமணி சி.க.நூலுக்கு வழங்கிய வாழ்த்துரை 1999ஆம் ஆண்டு பண்டிதமணி முத்திரை வெளியீட்டு மலருக்கு வழங்கிய செய்தி, 1989இல் பண்டிதமணி நினைவு மலருக்கு வழங்கிய சிறப்புக் கட்டுரை போன்றன எல்லாம் பண்டிதமணிக்கு வழங்கிய பெருமதிப்பைக் காட்டி நிற்கின்றார் சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார்.

இங்கு பண்டிதமணி அவர்கள், கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, என்ற வாக்குக் இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். தாய்நாட்டிரும், சேய்நாட்டிலும், மலேசியா முதலிய தமிழ் நிலங்களிலும் உள்ள சைவ நிலங்களிலும் பண்டிதை அவர்கள் செய்த சைவப் பமிரசங்கஙகள் பல ஆயிரக்கணக் கானவை. ஆங்காங்கு அவாகளுக்கு வழங்கிய பட்டங்களும், பாராட்டுகளும் பிரசித்தமானவை கனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக சைவத்துக்கும். தமிழுக்கும் பெருந் தொண்டு ஆற்றி 87 ஆண்டுகள் வாழ்ந்த பண்டிதமணியும், 83 ஆண்டுகள் வாழ்ந்த சிவத்தமிழ்ச் செல்வியும் எங்கள் காலப்பகுதியில் உலகுக்காக வாழ்ந்து வரலாறு ஆகிவிட்டார்கள்.

நமது பெருமக்களை என்றும் நினைவு கொள்வோமாக.



# வெற்றி பெறுவோருக்கு ஒரு குழந்தை பரிசு!










தொலைக்காட்சியில் நடைபெறும் போட்டிகள் பல அறிந்திருப்பீர்கள். ஒருகோடி வெல்லலாம். ஒரு வீடு வெல்லாம். ஏன் ஒரு கார் வெல்லலாம். ஆனால் ஒரு குழந்தையைப் பரிசாக வெல்லலாமா?

ஆம் வெல்லலாம் உங்களுக்கு குழந்தைகள் இல்லை என்றால்!

வெல்பாக்கிஸ்தானில் நடைபெறும் Amaan Ramadan எனும் பிரபலமான நிகழ்ச்சி ஒன்றில் தான் Dr.Aamir Liaquat Hussain எனும் பிரபல நிகழ்ச்சித்தொகுப்பாளர் இப்படி ஒரு புதிய பரிசுத்திட்டத்தை அறிவித்துப் புயல் கிழப்பியுள்ளார்.

இவ் நிகழ்ச்சியில் பல குழந்தைகளற்ற தம்பதியினர் பங்கு கொள்கின்றனர். இம்முறை றம்லான் பண்டிகையின்போது குப்பையில் இடப்பட்ட ஓர் பெண் குழந்தையை முதல் பரிசாக அறிவித்துள்ளார்கள். இதனூடாக நிகழ்ச்சி யின் பார்வையாளர்களின் எண்ணிக்கை உச்சத்தை எட்டியது.
இப்பரிசினைத் தட்டிச்செல்ல பல போட்டிகளில் பங்குகொள்வதோடு ஸ்லாம் மதத்துக்கான மற்றும் சமையற்கலைக்கான போட்டிகளிலும் தேர்சி பெற வேண்டும்.


பாத்திமா எனும் பெயரைச்சூட்டி இப் பெண்குழந்தையை பரிசாக வெற்றி கொண்ட தம்பதியினர் மிகுந்த பூரிப்பில் உள்ளனராம். 14 வருடம் குழந்தை இல்லாத தமக்கு றம்லான் பண்டிகை தந்த சிறந்த பரிசு என்றும் கொண்டாடுகிறார்களாம். புத்திரபாக்கியம் இல்லாதலால் தம்மை மறுமணம் செய்ய பல தூண்டுதல்கள் இருந்தாலும், தாம் பொறுமையுடன் இருந்ததற்கு இன்று பலன் கிடைத்தது என்று மகிழ்கிறாராம் பாத்திமாவின் புதிய தகப்பனார்.
இவ் நாட்டில் வருடாந்தம் நூற்றுக்கணக்கான குழந்தைகள் அதிலும் அதிகம் பெண் குழந்தைகளே வறுமைக்கோட்டுக்குள் வாழும் தம்பதியினரால் கைவிடப்பட்டு வருகின்றனர். இப்படிக்கைவிடப்படும் குழந்தைகள் பலரை குப்பைத்தொட்டியில் இருந்து மீட்டுவரப்படுகின்றனா். இதில் பல குழந் தைகள் உயிர் இழந்தும் வருகின்றனர்.

பாக்கிஸ்தானில் பெண் உரிமைக்காகப் பாடுபடும் திருமதி Rakhshanda Parveen கூறுகையில் : இதனூடாக ஓர் உயிருக்கு நல்ல வாழ்க்கை அமைவதை நினைத்து மகிழ்ந்தாலும் இதுபோன்ற சம்பவங்கள் விளம்பர தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தக்கூடாது என்பதே தன் விருப்பம் என்றும் கூறியுள்ளார்.

இஸ்லாம் மதச்சட்டத்தின்படி ஓர் குழந்தைக்கு பாதுகாவலர் எனும் உரிமையை மட்டுமே பெறமுடியும். தத்து எடுப்பதற்கு இம்மதம் அனுமதிப்பதில்லையாம்.

-மீரா





# கடலுக்கடியில் காட்டாறு!

இந்த ஆச்சரியமூட்டுகின்ற கடலுக்கடியில் ஓடுகின்ற ஆறு மெக்சிக்கோ நாட்டில் இருக்கின்றது. இது எவ்வாறு சாத்தியம் என்று நீங்கள் கேட்பீர்கள் ஆனால், அதற்கு ஒரு விஞ்ஞான விளக்கம் இருக்கின்றது. இதனை Halocline என்று சொல்லுவார்கள். இருவேறு உப்புத்தன்மை உடைய நீர், அடர்த்தி வேறுபாட்டால் இப்படியான ஒரு அதிசய ஆற்றை உருவாக்கும்.கடலுக்கடியில் படம்பிடிக்கின்ற புகைப்படப்பிடிப்பாளர் Anatoly Beloshchin இந்த ஆற்றினை அழகாய் படமெடுத்திருக்கின்றார். நீங்களும் பாருங்கள்.

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி
எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை
திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# மலைமீது வீடு இருக்கலாம்! வீட்டின்மீது மலை இருக்கலாமா!





சீனாவில் வீட்டின்மீது மலை!


கிரேக்கநாட்டில் மலைமீது வீடு



சீனாவில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அதே நேரம் கட்டிடத்தின் மேற்கூரையில் செயற்கையாக அமைக்கப்பட்ட மலையால் வீடுகள் சேதமடைவதாக பொதுமக்கள் கூறியுள்ளனர்.

மலை மீது கட்டிடங்கள் இருப்பதை நாம் பார்த்திருப்போம்... ஆனால் கட்டிடம் மீது மலை இருப்பதை பார்த்ததுண்டா... சீனாவின் தலை நகர் பீஜிங்கில் உள்ள ஒரு பேராசிரியர் ஒரு வித்தியா□சமான வீட்டை அமைத்தார். அடுக்குமாடி குடியிருப்பின் மேற்கூரையில் செயற்கை மலையை அமைத்து அவர் உருவாக்கிய வீடு அனைவரின் கவனத்தையும் கவரர்ந்தது.அதே நேரம் இதனால் வீடுகளின் சுவர்கள் பெயர்ந்து விழுவதாகவும், விரிசல் ஏற்படுவதாகவும் குடியிருப்பு வாசிகள் குற்றம் சாட்டினர்.இதையடுத்து முறையாக அனுமதி பெறாமல் அந்த வீடு கட்டப்பட்டுள்ளதால் அந்த வீட்டை அகற்ற வேண்டும் என்று நகர நிர்வாக அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். சீனாவில் வீட்டின் மேல் மலை. கிரேக்கநாட்டில் மாறுதலாக மலைமீது வீடு..மலைமீது வீடு என்றால் மலைக்குத்தானே சுமை

# தாயகத்தில் இளவயது திருமணங்கள் அதிகரிப்பு!



யுனிசெப்

இலங்கையில் இள வயதில் திருமணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாக ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதிய (யுனிசெப்) நிபுணர் குழு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இள வயது திருமணங்கள் நடைபெறுவதற்கான காரணங்கள் மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான வழி வகைகள் குறித்த சிறந்த புரிந்துணர்வை எட்டும் வகையில் ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) தரம் தழுவிய விசாரணையொன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கென குழுவொன்றை நியமித்திருந்தது.

இலங்கையில் குறிப்பாக அபிவிருத்தி குன்றிய மாவட்டங்களில் இள வயது திருமணங்களும் சட்டபூர்வமான கற்பழிப்புச் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்பட வாய்ப்புக்கள் உள்ளதெனச் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வொன்றை அடிப்படையாகக் கொண்டே மேற்படி விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

இத்தகைய இள வயதுத்திருமண முறையானது சிறுமியர் தங்கள் கல்வியைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்களை மட்டுப்படுத்தி வருவது மட்டுமின்றி, கர்ப்ப காலத்திலும் பிரசவ காலத்திலும் தாய் மற்றும் குழந்தைக்கு அபாயம் ஏற்படக்கூடிய நிலை, குழந்தைகள் மத்தியில் காணப்படும் போஷாக்கின்மை மற்றும் பிந்திய அறிவு வளர்ச்சி உள்ளிட்ட எதிரிடையான தேகாரோக்கிய விளைவுகளுடனும் அது அடிக்கடி தொடர்புடையதாக விளங்கி வருவது குறித்தும் கண்டறியப்பட்டுள்ள இத்தகைய விடயங்கள் யுனிசெப் நிறுவனத்தை கரிசனை செலுத்த வைத்துள்ளன.

இது குறித்து இலங்கையில் உள்ள யுனிசெப் நிறுவனப் பிரதிநிதி ரெஸா ஹொசெய்னி தெரிவிக்கையில், இள வயது திருமணம் செய்யும் சிறுமியரும் அதிகரித்த வகையிலான வன்முறை, அவதூறு மற்றும் சுரண்டல் ஆகியவற்றுக்கு உள்ளாகி வருவதாக குறிப்பிட்டார்.

இத்தகைய இள வயது திருமணங்களால் பாதிக்கப்பட்டுள்ள 71 பேர் குறித்த பகுப்பாய்வொன்றை அடிப்படையாக கொண்டு தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மேற்கெள்ளப்பட்டுள்ள தரம் சார் விசாரணைகள் மூலம் இள வயது திருமணங்கள் அதிகரித்த நிலையில் நிகழ்ந்து வருவதாகவும் பராயம் அடையாதவர் பாலியல் தொடர்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. செவ்வி காணப்பட்டிருந்த 71 சிறுமியருள் 21 பேர் (30%) பதினெட்டு வயதை அடைவதற்கு முன்னரே கர்ப்பம் தரித்திருந்தமை தெரிய வந்துள்ளது. இது தேசிய சராசரியை விட 20 சதவீத உயர்வாகும்.

நடத்தப்பட்டுள்ள இந்த ஆய்வின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பரிந்துரைகளில் இளம் பருவத்தினருக்கான பயன் தரும் இன விருத்தி சுகாதார சேவைகள் மற்றும் தகவல் வழங்கல் சேவைகள், இள வயது திருமணத்தின் விளைவு பற்றிய தெளிவூட்டல் பற்றிய இயக்க செயற்பாடுகள் பலவந்தமாக திருமணம் செய்தல் மற்றும் இளம் வயதில் கர்ப்பம் தரித்தல் சம்பந்தமான சட்டத்தை மீளாய்வு செய்தல் என்பன அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.






# பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடத்தும் தகமை உடையது!

கனக்ஸ்



ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையில் சிந்திக்கின்றனவா?
திருவள்ளுவரின் காமத்துப் பால் பலருக்குத் தெரிந் திருக்கலாம். அது ஆண்பாலாரும் பெண் பாலாரும் ஒரே விடையம் பற்றி வெவ்வேறு விதமாகச் சிந்திப் பார்கள் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது

இம்மைப் பிறப்பில் பிரியலம் னென்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள் ( 1315)

இப்பிறப்பில் யாம் பிரியமாட்டோம் என்று காதலன் சொல்கிறான். அவன் சிந்தனை இப்பிறப்பு நன்றாக அமைய வேண்டும் நாம் இன்பம் கொழிக்க வாழ வேண்டும் என்ற வேட்கையோடு நின்று விடுகிறது. அவளோ வித்தியாசமான முறையில் சிந்திக்கிறாள். இவன் இப்பிறப்பை மட்டுந்தானே சொல்கிறான் அப்படியானால் அடுத்த பிறவியில் பிரியலாம் என்கிறானா? அப்படியானால் நாம் அடுத்த பிறவியில் பிரிந்து விடுவோமா? கிடைத்ததை அனுபவிக்காமல் கிடைக் காததைப் பற்றி எண்ணுகிறாள் கண்கள் கண்ணீரால் நிரம்பி விடுகின்றன. இன்னொரு குறள்:

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று
( 1317)

அருகே இருந்தாள். அன்பாகச் சல்லாபம் செய்து கொண்டிருந்தாள். சமய சந்தர்ப்பம் தெரியாமல் தும்மல் வந்து விட்டது. தும்மினேன். அவளும் வழமை போன்று " நூறாண்டு வாழ்க என வாழ்த்தினாள்" இது என்ன? அவள் கண்களில் கண்ணீர். ஆனந்தக் கண்ணீராக இருக்க முடியாது. அவள் மனத்தில் ஏதோ நிரடல். அதன் விளைவே இக்கண்ணீர். அவள் சிந்தனை வேறு விதமாகச் சென்றுள்ளது. என்னருகில் இருந்த இவன் தும்முவதற்குக் காரணம் யாரோ இவனைப் பற்றி எண்ணுவது தான். அவள் நிச்சயமாக ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அப்போ இவன் இதயத்தில் இன்னொரு பெண் அமர்கிறாள் போலும் என எண்ணிய அவளுக்குக் கண்கள் கண்ணீரால் நிரம்ப அவனை நோக்கி வினவுகிறாள்

" யார் உம்மை நினைத்ததால் தும்மினீர்?"
வள்ளுவர் சொல்வதற்கு முன்பாகவே கூட ஆணினது மூளையும் பெண்ணினது மூளையும் வித்தியாசமான முறையிலே தான் சிந்திக்கிறது என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.
ஆணிற்கும் பெண்ணிற்கும் வெறும் பாலியல் வேறுபாடு மாத்திரமல்லாது உடற்றொகுதியின் ஒவ்வொரு கூறிலேயும் வேறுபாடு இருப்பதைக் காணமுடியும்.

பெற்றோர்களினது முட்டை மற்றும் விந்தில் வரும் நிறமூர்த்தங்களும் அவற்றிலே அமைந்த பரம்பரை அலகுகளும் முளையத்தின் பாலியலைத் தீர்மானிக்கின்றன. விருத்தியுறும் முளையம் ஆணாக விருத்தியுறுமா பெண்ணாக விருத்தியுறுமா என்பது கருக் கட்டப் படும்போது தான் தீர்மானிக்கப் படுகிறது. பாலியல் தீர்மானிக்கப் பட்டதும் ஓமோன்கள் தோன்றி எங்கும் செல்கின்றன. முளையம் படிப்படியாக விருத்தியுறுகிறது. அங்கங்களும் அங்கத் தொகுதிகளும் விருத்தி யடைகின்றன. ஓமோன்கள் விருத்தியுறும் மூளையின் உள்ளேயும் செல்கின்றன.
விருத்தியுறும் மூளை இந்த ஓமோன்களால் நெறிப்படுத்தப் பட்டு பிரத்தி யேகமான முறையில் விருத்தியடைகின்றது. குழந்தை பிறந்த பின்னர் அது பெறுகின்ற கல்வி அறிவும் பட்டறிவும் சேர்ந்து கொள்ள பிள்ளை " பிள்ளை" யாகிறதைக் காணலாம்.

பெண்களைப் பொறுத்த மட்டிலே எஸ்திரோஜன் ( Estrogen) எனப்படும் ஓமோன் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பெண்களுடைய கல்வி அறிவு, சிந்தனை, நினைவுத் திறன் ஆகியவற்றுடன் எஸ்திரோஜன் நிறைந்த சம்பந்தமுடையது.
பொதுவாகவே ஆண்களுடைய மூளை அதே வயதுடைய பெண்ணினதிலும் பார்க்கப் பெரிதாகவே இருக்கும். மூளையினை இருவகைக் கலங்கள் உருவாக் குகின்றன. அவை நரம்புக் கலங்களும் (Neurons) நரம்புப்பசையிழையக் கலங்களும் (Neuroglea) ஆகும். நரம்புக் கலக்களே மூளையினது தொழிற் பாட்டிற்குக் காரணமாகின்றன. இந்நரம்புக் கலங்கள் சிறுசிறு முளைகள் மூலம் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன. முளையினது பிரதானமான பாகம் முளையம் ( Cerebrum) எனப் படுகிறது.

அதன்பரப்பு முழுவதுமே பல நெளிந்த பீடங்களையும் சால்களையும் கொண்டிருக்கும். நேர்கோட்டினிலே அமைந்த ஆழமான ஒரு சால் மூளையத்தை இரு அரைக் கோளங்களாகப் ( Cerebral hemispheres) பிரிக்கின்றது. அவை இடது மூளைய அரைக்கோளம் வலது மூளைய அரைக்கோளம் என அழைக்கப் படுகின்றன.
ஆண்களின் மூளை பெண்களினதிலும் பார்க்கப் பெரிதாக இருந்தாலும் கூட பெண்களினது இடது மூளைய அரைக் கோளத்தில் உள்ள நரம்புக் கலங்களின் தொகை ஆண்களினதிலும் பார்க்கப் பெருமளவு அதிகம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இந்தப் பாரபட்சம் இதனுடன் நின்று விடவில்லை. நரம்புக்கலங்கள் ஒன்றோடோன்று தொடர்புறுவது அவற்றின் நரம்பு முளைகள் சுரக்கும் இரசாயனப் பொருள் ஒன்றின் மூலமாகவே. இந்த இரசாயனப் பொருள் டோபமைன் ( Dophamine) எனப் படுகிறது. பெண்களிலே இந்த டோபமைன் கூடியசெறிவில் சுரக்கப் படுகிறதாம். இதனால் வேகமாகவும் சிறப்பாவும் பெண்ணினது நரம்புக் கலங்கள் செயற்பட முடிகிறது.

இடது மூளைய அரைக்கோளம் செவி மடுத்தல் மற்றும் உரையாடு தலுடன் சம்பந்தப் படுகிறது வலது மூளைய அரைக்கோளம் சுற்றுச் சூழலை உணர்தல், மற்றும் வாழி டத்தோடு சம்பந்தமான செயல் களுடன் தொடர்புடையது. மேறியான் லெகாற்ரோ ( Maria nne Legato) எனும் பெண்மணி" ஆண்கள் ஏன் எப்பொழுதும் நினை வில் வைக்கிறார்கள் இல்லை பெண்கள் ஏன் ஒரு பொழுதும் மறப்பதில்லை"

தொடர்ச்சி 10 ம் பக்கம்

14.09.2013
வெற்றிமணி விழா மண்டபம்
நேரம்: 5.00
Diertrich-HeuningHaus
Leopold Str.50-58
44147 Dortmund
(பிரதான புகையிரத நிலையத்தின் பின்புறவாசலுக்கு எதிர்ப்புறம்)
(Opersite the Haupt Bahnhof Hinter Eingang)
பிரவேசம்:
அன்பளிப்பு 3€ மட்டுமே!

Orientalische Textilien & Schmuck
Dortmund நகரில் நடைபெறும்
வெற்றிமணி விழாவை முன்னிட்டு எமது ஸ்தாபனத்தில்
மாபெரும் மலிவு விற்பனை!
02.9.2013 முதல் 14.09.2013 வரை
பட்டுச்சேலைகள் பஞ்சாபிகள் மற்றும் அனைத்து வகையான சேலைகளும் விஷேட விலைக்கழிவில்
இன்றே நாடுங்கள்
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836



9ம் பக்கத் தொடர்ச்சி

## பெண்ணினது மூளை ..

( Why Men Never Remember and Women never Forget) எனும் ஒரு நூல் எழுதி யுள்ளார்கள்." சில சமயங்களிலே ஆண்களுடன் பேசுவது கற்சுவரிலே தலையை மோதிக் கொள்வது போல உள்ளது " என விரக்தியுடன் லெகாற்றோ கூறுகிறார்.

" சொல்லுவது எதனையும் அவர்கள் செவி மடுப்பதில்லை அல்லது நாம் சொல்வ தால் அவர்கள் எரிச்சல் அடைகிறார்கள், நாம் சொல்வதற்கான பதில் அவர் களிடமிருந்து வருவதும் இல்லை அப்படி வந்தாலும் அவை சரியான பதில்களாக அமைவதில்லை" என ஆண்களை முற்றாகவே மட்டம் தட்டி விடுகிறார் லெகாற்றோ.

ஆண்களினது மூளை ஒரு சமயத்தில் ஒரு விசயம் பற்றியே சிந்திக்கிறது எனவும் சம்பந்தப் பட்ட வேலையிலிருந்து ஏனைய கவன ஈர்ப்புகளை நிராகரிக்கும் அற்புத திறமை ஆணின் மூளைக்கு உள்ளதாகவும் கூறும் லெகாற்றே பெண்ணினது மூளை பல நடவடிக்கைகளை ஒரே சமயத்தில் நடாத்தும் தகமை உடையது எனவும் கூறுகிறார்.

எனவே தான் "ஆண்கள் பத்திரிகை படிக்கின்ற சமயத்திலோ அல்லது தொலைக் காட்சி பார்க்கின்ற சமயத்திலோ அவர்களுடன் ஏதாவது முக்கிய விசயங்கள் பற்றிச் சர்ச்சையில் ஈடுபட வேண்டாம். அவர்கள் நிச்சயமாகச் செவியில் அதனை ஏற்க மாட்டார்கள். ஆகவே பின்னர் அது பற்றி வருந்துவதில் ஒருவிதமான பிரயோசனமும் இல்லை" என்கிறார்.

ஆண்கள் பேச்சற்ற சைகைகளைக் கவனிக்கவே மாட்டார்கள் ஆகவே அவர்களுக்கு எப்பொழுதும் சொல்லாலே தான் விசயத்தை எடுத்துக் கூறவேண்டும் என்பது லெகாற்றோவின் கருத்து. பெண்கள் பேச்சு மற்றும் இடம் சம்பந்தமான செயல்களில் சம்பந்தப்படும் பொழுது மூளையினது கூடுதலான பகுதியைப் பிரயோகிக்கிறார்கள் என ஆய்வுகள் தெரியத் தருகின்றன.

மேரியான் லெகாற்றா போலல்லாது கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர் பேறன்- கோஹுன் ( Baron- Cohen) கொஞ்சம் ஆண்களுக்குச் சாதகமாகக் குறிப்புகள் தருகிறார். ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே காணப்படும் மூளையின் அமைப்பு வேறுபாடு வெறும் கூர்ப்பு விளைவான இசை வாக்கங்களே என்கிறார் பேறன் கோஹுன். இதற்கு மனித இனம் தோன்றிய காலத்திற்கு நாம் செல்ல வேண்டும். அக்காலத்திலே ஆண்மகன் இடமறிந்து, வழிகண்டு வனத்தினூடாக உலாவி கருவி கொண்டு உணவுக்காகவும், பாதுகாப்புக்காகவும் விலங்குகளைக் கொன்று இயற்கையைத் தன் வசமாக்க முயன்றான். மூளை அதற்கேற்ப சிறத்தல டைந்தது. பெண்ணோ இல்லத்தில் தங்கி குழந்தையைப் பராமரித்தாள் இல்லத்தின் தேவைகளை ஈடுசெய்தாள். இதன் விளைவாக அவளது மூளை உறவுகளை ஏற்படுத்துதற்கும், மொழியினைப் பாவிப்பதற்கும் பேச்சு அற்ற சைகைகளைப் புரிந்து கொள்வதற்கும் இசைவு பெற்றது.

பேறன்- கோஹுனின் கருத்துப்படி பெண் எப்பொழுதுமே மற்றை யோருடைய நல் அபிப்பிராயத்தினைப் பெற்று இன்னொருத்தருடைய ஆளுமையில் வாழுவதற் கேற்றவாறு அவளது மூளை விருத்தியுறுகிறது. ஆனால் ஆணினது மூளையோ முறைமைகளைப் பற்றி அறியவும் அவற்றினை உருவாக்கவும் ஏற்றவகையிலே உருவாகிறது. ஆணினதுமூளைக்கும் பெண்ணினது மூளைக்கும் இடையே உள்ள வேறு சில வேறுபாடுகள்:



**பெண்கள் பொதுவாகவே ஏனையோருடன் அன்பின் விளைவான பரிவர்த்தனை செய்யும் உறவினை நாடுவார்கள் ஆண்களோ தமது அந்தஸ்தையும் அதிகாரத்தையும் காண்பிக்கும் உறவினை விரும்புவார்கள்.**

பெண்கள் அனுபவங்கள் பற்றிக் கலந்துரையாடுதற்கும் சமத்துவமான தோழமை யோடு பழகுதற்கும் விரும்புவார்கள். ஆண்களோ ஒரே தன்மையான அக்கறை கொண்டோருடனும் சரியான போட்டி தரக்கூடியவரையுமே விரும்புவார்கள் பெண்கள் வெறுமனே பொழுது போக்கிற்காகவும் பழக வேண்டும் என்பதற் காகவும் மற்றையோருடன் கலந்துரையாடுகிறார்கள் ஆண்கள் தமது அறிவு ஆற்றல் மற்றும் திறன்களை காட்டுதற்காகவே சம்பாசிக்கிறார்கள்.

பெண்கள் பொதுவாக மற்றவர்களைப் பற்றிப் பேசுவதில் அக்கறை காட்டு வார்கள் ஆண்கள் மற்றவர்களைப் பற்றிப் பேசுவதிலும் பார்க்க ஏதாவது பொருட்கள் பற்றிப் பேசவே நாட்டம் காட்டுவார்கள். இன்னும் சொல்லலாம். நான் சொல்லாமல் விட்டதை நீங்கள் சேர்த்துக் கொள்ளுங்கள் இந்தப் பட்டியல் தொடரும்.

## வெற்றிமணி விழாவில் ஏழாமறிவு, மொழி, மாயவன் புகழ் திரைப்படப் பாடகர் பல்ராம், மற்றும் பிரபல திரைப்படப்பாடகி மாதங்கி

யேர்மனியில் வெற்றிமணி விழா டோட்முண் நகரில் 14.09.2013 சனிக்கிழமை மாலை.5.00 மணிக்கு.சிறப்பாக நிகழவுள்ளது. மேற்படி விழா நம்மவர் இசையமைப்பில் மொழி, ஏழாம் அறிவு பார்த்தாலே பரவசம் புகழ் (இன்னும் என்ன தோழா,காற்றின் மொழி…,நீதான் என் தேசியகீதம் நந்தலா நந்தலா…) தென் இந்திய திரைப்படப்பாடகர் திரு.பல்ராம் அவர்கள் நேரில் கலந்து பாடிச்சிறப்பிக்கின்றார்.

விழாவில் பைரவன் அல்பம் வெளியிடப்பட உள்ளது. அதன் பாடல்களை நேரில் மேடையில் பாடி மகிழ்விப்பார்கள். தென் இந்திய திரைப்படப் பாடகர் பல்ராம் அவர்கள் பழைய புதிய சினிமாப் பாடல்களையும் பாடி மகிழ்விப்பார்.

இவருடன் தென்னிந்திய திரைப்படப்பாடகியும் சங்கமம் நிகழ்ச்சி(விஜய் ரிவி)தொகுப்பாளருமான மாதங்கி கலந்துகொண்டு பாடுகின்றார்.

மற்றும் தாயகத்தில் மாதகலில் எழில்மிகு காட்சிகளின் நடுவே எடுத்த பாடல்காட்சி திரையிடப்படவுள்ளது.

முழுக்க முழுக்க பொழுதுபோக்கு அம்சங்களுடன்கூடிய இந்நிகழ்வு, எல்லோர் மனங்களையும் கொள்ளைகொள்ளும் என்பது திண்ணம்.



பல்ராம்



மாதங்கி

பிரவேசம் : அன்பளிப்பாக ஒருவருக்கு 3€ மட்டுமே!
(10 வயதுக்குட்பட்டவர்களுக்கு இலவசம்)




# மெல்ல மெல்ல யாழ் வரப்போகும் யாழ்தேவி!

## மூன்று சரக்கு ரயில்கள் கடந்தமாதம் கிளிநொச்சி வரை சென்றன!



ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான புகையிரதப் பாதைப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் மூன்று சரக்கு ரயில்கள் பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்டு நேற்று கிளிநொச்சி புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தன.

1990ஆம் ஆண்டின் பின்னர் வடபகுதிக்கான ரயில் சேவைகள் துண்டிக்கப்பட்டன. 1990ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி ரயில் நிலையத்துக்கு தற்போது முதன் முறையாக ரயில்கள் சென்றன.

பரீட்சார்த்த பயணத்தை மேற்கொண்டிருந்த மூன்று சரக்கு ரயில்களும் (11.08.2013) நேற்றுப் பகல் கிளிநொச்சி புகையிரத நிலையத்தை வந்தடைந்தன. யுத்த காலத்தில் ரயில் தண்டவாளங்கள் கழற்றப்பட்டு சிதையுண்டு இருந்தன.

இந்த நிலையில் 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் மீள்குடியேற்றங்கள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுவந்த சூழ்நிலையில், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புகையிரத பாதை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஓமந்தை முதல் கிளிநொச்சி வரையான புகையிரதப் பாதைகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்திருப்பதுடன், கிளிநொச்சி புகையிரத நிலையத்தை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி வரையான புகையிரதப் பாதை பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் ஓமந்தைக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான பகுதிகளில் ரயில் நிலையங்களையும், சமிக்ஞை விளக்குகளை அமைக்கும் பணிகளும் தற்பொழுது இடம் பெற்று வருகின்றன.
அடுத்த மாதத்துக்குள் கிளிநொச்சிவரை பயணிகள் ரயில் சேவையை ஆரம்பிக்க முடியுமென ரயில்வே திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. மெல்ல மெல்ல இனி யாழ் தேவியும் யாழ்வரும்.



1974 இல் கோண்டாவிலில் யாழ்தேவி



தற்போது கிளிநொச்சி



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# நாம் ஊட்டிவிட மறந்தது!
# ஆட்டிறச்சி பிரட்டலையும்,கயல்மீன் குழம்பையும் அல்ல!

## பிறந்த நாள் விழாக்களில் இப்படி ஒரு போட்டி வைக்கலாமே!

நாம் தாயகம் விட்டு வந்து பலகாலமானாலும் நாம் இன்னும் மறக்காமல் இருப்பது எது!
பிள்ளைகள் நம்முடன் வளரும்போது அவர்களுக்கு நாம் (அவர்களுக்கு பிடித்தது என்பதற்காக அல்ல) நமக்குப் பிடித்தவற்றை செய்து கொடுத்தோம். நல்ல உழுந்து வாங்கி அரைத்து தோசையும் உழுந்து வடையும், அரிசிமாவில் புட்டு இடியப்பம் ஏன் பாலப்பம் எல்லாம் செய்து அவர்களுக்கு ஊட்டி ஊட்டி அதன்மேல் ஆசைவரும்படி பார்த்துகொண்டோம்.
அவர்களும் நன்கு உருசிப்பட்டு, இன்றும் அம்மாவின் தோசை அபாரம். அட அம்மா வைப்பா ஒரு ஆட்டிறச்சிக் குளம்பு, மணம் குணம் சொல்லமுடியாது, அப்படி ஒரு சுவை. அட மீன் குழம்புக்கு எங்க அம்மாவைக் கேட்டுத்தான். இப்படி அன்று இங்கு தாய் ஊட்டி ஊட்டி விட்டது உணவை மட்டுமல்ல, தாய் மொழியான தமிழையும்தான்.

இன்று நம்பிள்ளைகள் தம்பிள்ளைகளுக்கும் ஊட்டி விடுகின்றார்கள் அட அம்மம்மா செய்துதருவாடா அதே மீன்குழம்படா! இந்த ஆட்டிறச்சிப் பிரட்டலைப் பாரடா சும்மா தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். இந்த மிளகாய்த் தூள் அம்மம்மாவின் ஸ்பெசல் அயிற்ரம். எல்லாம் தாய் நாட்டில் இருந்து வந்தது. என்று உணவினைப் பற்றோடு வேற்று மொழியில் சொல்லிச் சொல்லி ஊட்டுவார்கள்.
நம்பிள்ளைகள் செய்யும் உணவில் அதே சுவையிருக்கும், அதே மணம் இருக்கும், ஆனால் ஊட்டும்போது பேசும் மொழியில் மட்டும் தமிழ் இருக்காது. உணவு செய்ய நேரம் இருக்கிறது, ஊட்ட நேரம் இருக்கிறது, ஊட்டும்போதும் தொலைபேசியில் பேச நேரம் இருக்கிறது. ஆனால் பிள்ளைகளுடன் இரண்டு வார்த்தை தமிழில் பேச நேரம் கிடைப்பதில்லை.
பிறந்த நாள் கொண்டாட்டம். பலவிதமான போட்டிகள். பலவிதமான பரிசுகள். அதில் ஒரு போட்டி வைக்கலாமே! நம் பேரப்பிள்ளைகள் தம் தாய் மொழியில் அதிக நேரம் இல்லை, ஒரு பத்து நிமிடம் தங்களுக்குள் பேசவேண்டும் என்றும்.
பெற்றோர்களுக்கும் விருந்தினர்களுக்கும், ஒரு போட்டி! நிகழ்ச்சி முடியும் வரை தங்கள் தாய்மொழியில் தங்களுக்குள் பேசவேண்டும் என்று வைக்கலாமே!
முடிந்தால் செய்யுங்கள், கட்டாயம் அல்ல. போனால் போகுது நம் தாய்மொழிதானே!



# பெண்கள் விரும்புவது இவ்வளவுதான்!





பெண்களைப்பற்றி சரியாக புரிந்துகொள்ளாமலேயே பெரும் பாலான ஆண்கள் “பெண்கள் ஒரு புதிர், அகம்பாவம் பிடித்தவர்கள்' என, அவர்களை ஒதுக்கித் தள்ளுகின்றனர். ஆனால் பெண்கள் அப்ப டிப்பட்டவர்கள் அல்ல, அவர்கள் புறக்கணிக்கப்படுவதாலேயே வெறுப்படைகின்றனர். பெண்கள் உற்சாகமாக இருந்தா லே குடும்பம் உற்சாகமாக இருக்கும்..

மனைவி என்பவள் வேலைக்காரி அல்ல, அதேபோல் சம்பாதித்து கொடுக்கும் மிசினும் அல்ல. அவ ளும் உணர்வு பூர்வமானவள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சரிசமமாக நடத்த வேண்டும் என்பதையே ஒரு பெண் எதிர்பார்ப்பாள்.
அம்மா போல யாராலும் சமைக்க முடியாதுதான். ஆனால் மனைவியின் சமையலை ஆகா, ஓகோ என்று பாராட்டுங்கள். அவர்கள் உச்சிக்குளிர்ந்து போவார்கள்.
விடுமுறை நாட்களில் விரும்பிய படி ஓய்வு எடுக்க அனுமதிக்க வேண்டும். அன்றும் விசேஷமாக சமையல் செய்ய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது.

சமையல் அறையில் மனைவிக்கு கணவரும் உதவ வேண்டும்.
எல்லாவற்றையும் அவசர, அவசரமாக செய்ய வேண்டும் என தொந்தரவு செய்யக்கூடாது. குழந்தைக்கு உடல்நிலை சரியி ல்லை என்றால் மனைவியை திட்டக் கூடாது. குழந்தையை பராமரிக்கும் பொறுப்பு இருவருக்கும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.
மனைவி உடுத்தும் உடைகளைப் பார்த்து இந்த உடை உனக்கு நன்றாகஇருக்கிறது' என பாராட்ட வேண்டும்.

வருமானம் முழுவதும் கணவனி டமே இருந்தால், மனைவியை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.தினமும் ஒரு முறை யாவது இரண்டு பேரும் சேர்ந்து விவாதித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டும்.
நன்றாக, சிரித்த முகத்துடன் குழந்தைகள் படுக்கைக்குச் செல்லவேண்டும். குழந்தைகளை அடிமை போல்நடத்தக் கூடாது. இதில் கண வர்களின் பங்கு முக்கியம்.
பெண்கள் விரும்புவது இவ்வளவு தான். இவற்றை கணவர் நிறை வேற்றினால் போதும். அந்த குடும்பம் மகிழ்ச்சியான குடும்பம் தான்.
-Leo Joseph




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal


rmb3 VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb3 ist Partner der Gothaer

யோ்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!
THUSHI DEKO GERMANY

New in Germany
THUSHI DEKO GERMANY

T.Thiruselvam:

Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de



# தேன் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள்!!!





## தசைப் பிடிப்பை நீக்குகிறது!

மலர்களின் மகரந்தங்களை கொண்டு தேனீக்களால் சேகரிக்கப்பட்டு, மனிதர்களால் தேனீக்களிடம் இருந்து பறிக்கப்படும் அருமருந்தே தேன். அதனை அருமருந்து என்று சொல்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை. நிறைய மருத்துவ குணங்களை உள்ளடக்கிய பழுப்பு நிற திரவமே தேன் ஆகும். தேனை பரவலாக வயிற்றின் நண்பன் என்று கூட சொல்வார்கள்.

இதற்கு காரணம் வயிறு, பித்தப்பை சம்மந்தமான நோய்களுக்கெல்லாம் மருந்தாக விளங்குவதே ஆகும். தேனில் நோய் தீர்க்கும் பண்புகள் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்து உள்ளதால், தேன் சரும பாதுகாப்பு மற்றும் பல மருத்துவ பயன்பாடுகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. கீழே தேனின் பல்வேறு நன்மைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

சரும சுருக்கம் தேனை சருமத்திற்கு உபயோகித்தால், அது சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி, சரும சுருக்கம் ஏற்படாமல் பாதுகாக்கிறது.

ஆன்டி-பாக்டீரியல் பண்புகள் தேனில் பாக்டீரியாவிற்கு எதிரான பண்புகள் மற்றும் நுண்ணுயிர்களுக்கு எதிரான பண்புகள் இருப்பதால், பாக்டீரியா வளர்ச்சியை தடுக்கும். அதனால் இது வெட்டு காயங்கள், சிராய்ப்புகள், தீக்காயங்கள் ஆகியவற்றை குணப்படுத்த உதவுகின்றது.

காயங்களை குணமாக்கும் தேன் காயங்களை சுத்தப்படுத்தி, நாற்றம் மற்றும் சீழ் உண்டாவதை தடுத்து, வலியை குறைத்து காயம் விரைவாக குணமடையவதற்கு உதவுகிறது.

சரும பிரச்சனைகள் தேனானது சேதமடைந்த சருமத்தை சீர்படுத்தி புதிய செல்கள் உருவாவதற்கு உதவுகிறது. அதிலும் சரும அழற்சி, சரும பிரச்சனைகள் ஆகியவற்றை சரிப்படுத்தும்.

சூரியனிடமிருந்து சருமத்தை பாதுகாக்கும் தேனில் இயற்கையாகவே ஆக்ஸிஜனேற்றான்கள் (Oxidants) நிறைந்துள்ளது. இவை சருமத்தை புற ஊதா கதிர்களில் இருந்து காக்கிறது.
சொறி, சிரங்கு, படை தேனில் உள்ள பூஞ்சை எதிர்க்கும் பண்புகள் படை, சிரங்கு போன்ற சரும நோய்களைக் குணப்படுத்தும்.

முதுமை தோற்றத்தை தடுக்கும் சூரியக்கதிர்கள் சருமத்தில் அதிக நேரம் பட்டால், அது சருமத்தை சேதப்படுத்தி முதுமை தோற்றத்தை ஏற்படச் செய்யும். ஆகவே தேனை சரும பராமரிப்பிற்கு பயன்படுத்தினால், அது சூரிய ஒளியால் ஏற்படும் சரும பாதிப்புகளை தடுக்கும்.

அழகான உதடுகள் சுருக்கம் மற்றும் வெடிப்புகள் நிறைந்த உதடுகளில் தேனை தொடர்ந்து தடவி வந்தால், உதடுகள் பட்டு போல மிருதுவாகும்.

## மலைத்தேன் எடுப்பதைக் கண்டு

# மலைத்தேன்!

இந்த அருமருந்தான தேன் எவ்வாறு எல்லாம் பெறப்படுகின்றன எனப்பார்த்தால் நீங்கள் மலைத்துப்போவீர்கள். இதோ கண்ணதாசனின் பாடல் வரிகளை ஞாபகப்படுத்தும் மலைத்தேன் எடுக்கும் வியட்நாம் மனிதர்களைக் கண்டு மலைத்தேன். அந்தமலைப்போடு தேன்பற்றியும் தெரிந்து கொண்டு, இனிமேல் தேனை அதிகம் பயன்படுத்துங்கள்.





தொடர்ச்சி 14ம் பக்கம்



13ம் பக்கத் தொடர்ச்சி

# தேன் சாப்பிடுவதால்...





ஊட்டச்சத்துக்கள் தேனில் குளுக்கோஸ் மற்றும் ஃபுருக்டோஸ் நிறைந்துள்ளன மற்றும் தாதுக்களான மெக்னீசியம், பொட்டாசியம், கால்சியம், சோடியம் குளோரின், சல்பர், இரும்பு மற்றும் பாஸ்பேட் போன்றவைகளும் நிறைந்துள்ளன.

வைட்டமின்கள் மேலும் அதில் மகரந்த தன்மைக்கு ஏற்ப வைட்டமின்களான பி1, பி2, சி, பி6, பி5 மற்றும் பி3 ஆகிவை அடங்கியுள்ளன. அவை மட்டுமின்றி தாமிரம், அயோடின், மற்றும் துத்தநாகம் ஆகியவையும் சிறிய அளவில் உள்ளன.

தசைப் பிடிப்பு குளுக்கோஸ் மற்றும் ஃபுருக்டோஸ் வடிவில் உள்ள கார்போஹைட்ரேட் உடலுக்கு ஆற்றல் அளித்து தசைகள் சோர்வடைவதைக் குறைக்கும்.

இரத்தசோகை தேன் அருந்துவதை வழக்கமாக கொண்டால், கால்சியம் உறிஞ்சுதல் மற்றும் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, இரத்தசோகை நோய்க்கு எதிராக போராட உதவும்.

கொலஸ்ட்ரால் தேன் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைத்து, உடலுக்கு தேவையான நல்ல கொழுப்பை அதிகப்படுத்தும்.

சுவாசப் பிரச்சனைகள் தேனில் சளி நீக்கும் பண்பு மற்றும் ஆறுதல் அளிக்கும் தன்மை இருப்பதால், சுவாசக் குழாயில் இருக்கும் நோய்த்தொற்றுகளை சரிசெய்யும்.

நோயெதிர்ப்பு சக்தி தேன் சாப்பிட்டு வந்தால், அது நோய் எதிர்ப்பு மண்டலத்தை மேம்படுத்தி, நோய்களின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கிறது.

எடை குறைவு உடல் எடையை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொள்ளும் பண்பு தேனுக்கு உள்ளது. மேலும் ஜீவத்துவ பரிணாமத்தை மேம்படுத்தி, தேவையற்ற கொழுப்புகளை எரிக்க உதவுகிறது.

உடல் சோர்வு தினமும் தேன் சாப்பிட்டு வந்தால், காலை எழுந்தவுடன் ஏற்படும் சோர்வை போக்கலாம்.

## யேர்மனி -கம் சித்திவிநாயகர் ஆலய தேர் திருவிழாக் காட்சிகள் (04.08.2013)



படங்கள்:வெற்றிமணி




RAJE druck
ராஜி பதிப்பகம்
Spezialdruckerei Fernöstlicher Medien
Inh.: Kandiah Ampalavanapillai e.K
சகல விதமான அச்சுப்பதிப்பு வேலைகளும்
தரமானதாகக் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் போன்றவற்றுக்கு
நிழற்படம் எடுத்து நவீன டிசைன்களில் அல்பம் செய்து தரப்படும்.
Neu Straße 53, 58256 Ennepetal. Tel.: 0 23 33 / 60 27 96
Fax: 0 23 33 / 98 41 61 Mobil: 0 172 956 76 46 Pvt. Tel.: 0 23 33 / 62 32 8
info@rajedruck.de www.rajedruck.de







# இந்தியாவை திருப்திப் படுத்தவே எனக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது!

**ராஜீவை தாக்கிய முன்னாள் கடற்படை வீரர் விஜித ரோஹண விஜிதமுனி கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவியின் ஒரு பகுதி**

இந்தியாவை எதிர்க்கவில்லை. ராஜீவ் காந்தி யென்ற ஆக்கிரமிப்பாளனையே எதிர்த்தேன். ராஜீவை தாக்கியமை அரச துரோகமானாலும் அது தேசத்துரோகமல்ல. இந்தியாவை திருப்திப் படுத்தவே எனக்கு சிறைத் தண்டனை வழங்கப பட்டது. தேசப்பற்று இன்று அரசியல் வயிற்றுப் பிழைப்பாக மாறிவிட்டது.

நான் இந்தியாவுக்கு எதிரானவன் அல்ல. ஆனால் இலங்கையின் வான் பரப்பில் அத்து மீறி, எமது நாட்டை ஆக்கிரமித்த ராஜீவ் காந்தி பலாத்காரமாக இந்திய - இலங்கை உடன் படிக்கையை மேற்கொண்டு நாட்டைப் பிரிக்கும் 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் எமது அரசியலமைப்புக்குள் புகுத்தினார். இதனால் ராஜீவ் காந்தியை எதிர்த்தேன். எனவே, எனது நாட்டை பாதுகாப்ப தற்காகவே ராஜீவை பழிவாங்கும் எண்ணம் என் மனதுக்குள் உருவானது. இதன் காரணமாகவே கடற்படை அணிவகுப்பின்போது தாக்குதலை நடத்தினேன் என முன்னாள் கடற்படை வீரர் விஜித ரோஹண விஜிதமுனி தெரிவித்தார்.

வீரகேசரி நாளிதழுக்கு வழங்கிய விசேட நேர்காணலின் போதே தனது மனம் விட்டு இத்தகவல்களை வெளியிட்டார்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி அன்றைய இந்திப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையே உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

அடுத்த தினம் 30ஆம் திகதி கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ராஜீவ் காந்திக்கு கடற்படை அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இதன் போதே அன்று கடற்படை வீரராக அணிவகுப்பில் கலந்துகொண்ட விஜித ரோஹன விஜிதமுனி ராஜீவ் மீது தனது கையிலிருந்த துப்பாக்கியின் பின் முனையினால் தாக்குதல் நடத்தி நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

இன்று நாட்டில் 13ஆவது திருத்தம் ஒழிக்கப்பட வேண்டும். மாகாண சபை தேவையில்லையென்ற 'விவாதம்' தலைதூக்கியுள்ளது. இவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே 1987இல் ராஜீவ் மீது தாக்குதலை நடத்திய விஜித ரோஹண விஜித முனியை நேர்காணல் காண்ப தற்காக அவரது வர்த்தக நிலையத்திற்குச் சென்றோம்.

இதன்போது அவர் வெளியிட்ட கருத்துக்களை இங்கு விபரமாக வழங்குகிறோம்.

கேள்வி: இத் தாக்குதலை நடத்துவதற்கான திட்டத்தை எவ்வாறு வகுத்தீர்கள்?

பதில்: ராஜீவ் காந்தியின் பலாத்காரமான உடன்படிக்கை கைச்சாத்திடலுக்கு எதிராக அன்று நாட்டுக்குள் பாரிய எதிர்ப்பலைகள், ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கின.

இந்தியாவின் 26ஆவது மாநிலமாக இலங்கையின் வட, கிழக்கை மாற்ற இடமளிக்கமாட்டோம் என்ற போராட்டங்கள் வெகுண்டெழுந்தன.

இந்த நிலையில் இதற்கு எதிராக எதனையாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் என் மனதுக்குள் ஏற்பட்டது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினத்தில் அன்றைய ஆட்சியாளர்கள் அடக்கு முறையை பிரயோகித்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அத்தோடு பயங்கரவாதிகளுக்கு எதிரான வடமராட்சி இராணுவ நடவடிக்கை வெற்றி பெறும் நிலையிலிருந்தது. இதில் நானும் கலந்து கொண்டேன்.

ஆனால், இந்த இராணுவ நடவடிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டது. இதனால் எனது மனதில் கவலை குடிகொண்டது மட்டுமல்லாமல், ராஜீவுக்கு எதிரான கோபமும் பழிவாங்கும் உணர்ச்சியும் அதிகரித்தது.

இதனை தீர்த்துக்கொள்வதற்கு அணி வகுப்பு சிறந்த சந்தர்ப்பம் என்பதை என் மனம் அசை போட்டது. ராஜீவை கொலை ? செய்ய இந்த உடன்படிக்கையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற எண்ணம் எனது மூளையில் பதிவானது.

கேள்வி: இத் தாக்குதலை நடத்துவதற்கு உங்கள் பின்னணியில் ஏதாவது ஒரு சக்தி செயற்பட்டதா?

பதில்: அவ்வாறு எந்தவொரு பின்னணியும் கிடையாது. எவரோடு பேசுவதற்கும் எனக்கு அவசியம் இருக்கவில்லை.

கேள்வி: தாக்குதலை நடத்துவதற்கு முதல்நாள் மனநிலை எப்படி இருந்தது?

பதில்: ராஜீவை தாக்குவதால் நான் 'அரச துரோகியாகலாம்'. ஆனால் 'தேசத்துரோகி'யாக மாட்டேன். எனவே, இத் தாக்குதலை நடத்தும் வரை எனக்கு அன்றைய தினம் தூக்கமே வரவில்லை.

கேள்வி: இந்த அணி வகுப்பில் உங்களுக்கு முன்வரிசையில் 'இடம்' எப்படிக் கிடைத்தது?

பதில்: இது தானாக நடந்தது. உயரத்தின் அடிப்படையில் முன் வரிசை கிடைத்தது.

கேள்வி: அணி வகுப்பின் போது ராஜீவின் செயற்பாடு எவ்வாறு அமைந்திருந்தது?

பதில்: அணிவகுப்பு மரியாதையின் போது அரச தலைவர்கள் படையினரை உன்னிப்பாக கவனிப்பதில்லை. ஆனால், ராஜீவ் ஒவ்வொரு படை வீரரையும் உச்சந் தலைமுதல் உள்ளங் கால் வரை உன்னிப்பாக அவதானித்தார்.

கேள்வி: உங்கள் தாக்குதல் இலக்கு தவறியதா?

பதில்: எனது கையில் 'சில்க்' துணியிலான கிளவுஸே இருந்தது. எனவே நான் தாக்கிய போது அது ராஜீவின் தோற்பட்டையிலேயே விழுந்தது. உடனே ராஜீவ் குனிந்து விட்டார். எனவே தலையில் தாக்கும் எனது இலக்கு தவறியது.

கேள்வி: இதன் பின்னர் என்ன நடந்தது? ராஜீவ் கீழே விழுந்தாரா?

பதில்: கீழே விழுவதை போல் தென்பட்டாலும் அவர் எப்படியாவது தன்னை சுதாகரித்துக் கொண்டார். அத்தோடு ராஜீவ் அணிவகுப்பை பரீட்சிப்பதற்கு தனது மெய்ப்பாதுகாவலர்கள் 7 பேருடனே வந்திருந்தார்.

**தொடர்ச்சி 24ம் பக்கம்**

**தில்லையம்பதி மணவறைச் சோடினை**





Heidenheim: குணம்: Tel: 09833 5693 Handy: 0152 139 830 43 01756 34 67 40

**HK Hammacher**

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்

ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.



தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454

HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!




முயலாத விதையெல்லாம்
மண்ணுக்குள்
மண்ணாகும்,

முயலாத குஞ்செல்லாம்
முட்டைக்குள்
முடமாகும்.

முற்றத்தில் முதல் சுவடு
அதுவே
பயணங்களின் அகரம்.

பூப்பறிக்க மட்டுமல்ல
பிஞ்சுக் கைகள்.
அவை
பாறைகளையும் புரட்டிப் போடும்.

பழமொழியை புதிது செய்வோம்.

"முயலாதார் தலைவாசல் மிதிக்க
வேண்டாம் "
என
மழலைக்குப் பாடம் சொல்வோம்.

முடியும் என்று நினைப்பவனுக்கு
நிலவு கூட
அருகில் தெரியும்.
முடியாதென்று முடங்குவோனுக்கு
முற்றம் கூட
தொலைவாய் தோன்றும்.

கற்றுக் கொள்வோம்.
வெற்றி என்பது
கல்லைத் தூக்குவதிலல்ல
தூக்க முயல்வதில்.

**சேவியர்**

# சென்னையில் இசைவிழா ! வருகிறான் பைரவன்!

## பைரவன், இசையால் வெல்வான்.

டி.பி.பி வழங்கும் "பைரவன்" இசைத்தட்டு வெளியீட்டு விழா சென்னையில் நவம்பர் 2ம் தியதி நடைபெற இருக்கிறது. இசையமைப்பாளர் சஞ்சே அவர்களின் இசையில் அமைந்துள்ள பாடல்கள் இளைய தலைமுறையின் தேசியகீதமாய் ரீங்காரமிடுகின்றன. மேற்கத்திய இசையும், தமிழக இசையும் கலந்து வழியும் ஒரு புதுவித அனுபவத்தைப் பைரவன் வழங்குகிறான். கலாநிதி. மு.க.சு. சிவகுமரன், சேவியர், தமிழ்நிலா, --- போன்றவர்களின் பாடல்வரிகளுக்கு குரல்கொடுத்திருக்கின்றனர் எம்.சி.ஜீவா, ரோகினி, தென்னிந்திய பிரபல திரைப்படப்பாடகிகள் மாதங்கி என்.எஸ்.கே.ரம்மியா (நீதான் என் பொன் வசந்தம் சாய்ந்து சாய்ந்து...) விஜி, ஷாலினி, முருகேஷ்வரி, நான்சி, சதீஷ் மற்றும் பலர்.

டி.பி.பி இசைத் தகடு ஒன்று சென்னையில் வெளியாவது இதுவே முதல் முறை. சென்னைப் பாடகர்கள் இந்தக் குழுவில் பாடியிருப்பது இதுவே முதன்முறை. தமிழகத்தில் பாடல் பதிவும், படப் பதிவும் நடந்திருப்பது இதுவே முதன் முறை - என பல "முதல்" கள் இந்த விழாவில் இணைந்திருப்பது தனிச் சிறப்பு.

பைரவன், இசையால் வெல்வான்.







# உந்தன் சிரிப்பில் ....

**சுமார் ஒரு இலட்சம் பார்வையை தாண்டி வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.**

உந்தன் சிரிப்பில் முல்லைப் பூவும் பூக்கிறதே - எனும் பாடல் மாயவன் இசை ஆல்பத்தில் வெளியான அசத்தல் பாடல். டாக்டர். சிவகுமரன் அவர்களின் காதல் ரசம் சொட்டும் வரிகளில், சஞ்சே அவர்களின் இசையில், திரைப்பாடகர் பல்ராம் அவர்களின் மனதை மயக்கும் குரலில் உருவான பாடல் அது.



அந்தப் பாடலின் வீடியோ ஆல்பம் ஒன்று சமீபத்தில் வெளியானது. டாக்டர் சிவகுமரன் அவர்கள் படப்பதிவு செய்ய, சஜித் அவர்களின் எடிட்டிங் மூலம் ஆல்பம் அசத்தலாய் வெளிவந்திருக்கிறது. இலங்கையின் அழகிய காட்சிகளை அள்ளிக் கொண்டு வந்திருக்கும் இந்தப் படத்தில் நடித்திருப்பவர்களின் இயல்பான நடிப்பு மனதை வருடிச் செல்கிறது. இணையத்தில் வெளியான நாள் முதலே சரசரவென பற்றிக் கொண்டிருக்கும் இந்த வீடியோ சுமார் ஒரு இலட்சம் பார்வையை தாண்டி வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.
இசையையும், வீடியோவையும் ரசிப்பவர்கள் நீங்களெனில் தவற விடக் கூடாத இனிமையான அனுபவம் இந்தப் பாடல் !



மதுரையில் பைரவன் பாடல் படப்பிடிப்பு!

Duisburg நகரில் இருந்து
ஓர் சிறந்த சேவை!
House Tech
உங்கள் வீடுகளில் திருத்த வேலைகள் எதுவானாலும் சிறப்பாகச் செய்து தருகின்றோம்.
மாபிள் பதித்தல், லெமினாட் போடுதல், வீட்டுக்கு வெள்ளை அடித்தல், மற்றும் குழாய்கள் பொருத்துதல் போன்ற வேலைகளைச் செய்து தருகின்றோம்.
தொடர்புகளுக்கு: பிரபா
0203/4495842
0173/3274987



சரஸ்வதி கல்யாணமாலை
இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள்.
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165



# விஸ்வரூபம், தலைவா, இன்னும் பல...

## ஆளும் கட்சியைச் சீண்டும் விதத்திலோ வருகின்ற திரைப்படங்கள் சிக்கல்களைச் சந்திக்காமல் இருந்ததில்லை.

சேவியர்





தமிழகத்தின் ஆட்சியை நிர்ணயிக்கும் மிகப்பெரிய காரணிகளில் ஒன்றாக சினிமா எப்போதும் இருந்து வருகிறது.

அதனால் தான் தமிழகத்தில் வெளி வருகின்ற திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்கு எனுமளவில் அணுகப்படாமல் அது சமூகத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாகப் பார்க்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக ஆளும் கட்சிக்கு எதிராகவோ, ஆளும் கட்சியைச் சீண்டும் விதத்திலோ வருகின்ற திரைப்படங்கள் சிக்கல்களைச் சந்திக்காமல் இருந்ததில்லை. கடந்த தேர்தலில் விஜய் தற்போதைய ஆளும்கட்சிக்கு ஆதரவாகச் செயல்பட்டவர். "அணிலாக" உதவினோம் என வெற்றிக்குப் பின் தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக்கொண்டவர்கள். அதன்பின் தனது மகனின் செல்வாக்கை வைத்து விளம்பரம் செய்ய நினைத்த தந்தையால் வந்தது வினை. !

விஜயின் திரைப்படம் வெளியாகாமல் இருந்தது "வெடிகுண்டு" மிரட்டலின் காரணமாய் அல்ல என்பது சர்வதேசம் அறிந்த சங்கதி. ஆனால் அந்த சங்கதிக்கு எதிராய் யார் போராடியிருக்க வேண்டும் ? திரைப்படத் துறையின் வலிமை வாய்ந்த, ரசிகர் படைகளுடன் கூடிய நடிகர்கள் முதலில் குரல் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. அவரவர் படம் வெளியாக வேண்டுமே எனும் கவலை அவரவர்க்கு. தப்பித் தவறி டுவிட்டர் குடுத்தவர்கள் கூட, "ஐயோ நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை" என பல்டி அடித்தனர். தயாரிப்பாளர் சங்க தலைவரான தந்தையாலேயே வாய் திறக்க முடியவில்லை. தியேட்டர் உரிமையாளர்கள் மறுபக்கத்துக்கே தாவி விட்டார்கள். யாருக்குப் பிரச்சினை வந்ததோ அந்த நடிகரே எதிர்குரல் எழுப்பவில்லை.

திரையில் தாதாக்களின் கோட்டைகளையே தவிடுபொடியாக்கும் ஹீரோக்கள் நிஜத்தில் "மனமிரங்குங்கள்" என கண்ணீர் விட்டுக் கை கூப்பி காலில் விழுகிறார்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை ! நாளை அவர்களுக்கு வேறு தயாரிப்பாளர் வேண்டும். திரைப்படங்கள் வேண்டும்.

ஒரு திரைப்படம் வெளியாகாததொன்றும் கூடங்குளத்தைப் போலவோ, வறுமையைப் போலவோ சமூகத்தின் அஸ்திவாரங்களைக் கரைக்கக் கூடியதல்ல. அந்தப் படத்தின் தோல்வியோ வெற்றியோ சமூகத்தின் முன்னேற்றத்தை இம்மியளவும் அசைக்கப் போவதில்லை.

எனினும் ஒரு பிரபலத்தின் கண்ணில் விரலை விட்டு ஆட்டும் நிலையில் அரசியல் அமைப்புகள் இயங்குகையில், ஏழைகளின் குரல்வளையில் எத்தனை டன் அநீதிகள் அழுத்தும் எனும் சிந்தனை திகிலூட்டுகிறது. வீரத்தின் விளை நிலமாய் இருந்த தமிழ் மண்ணில், ஒரு படம் வெளிவரவில்லையே எனும் சோகத்தில் தற்கொலை செய்யுமளவுக்கு தமிழன் பலவீனமடைந்திருப்பதை நினைக்கையில் இயலாமையும், அவமானமுமே மிஞ்சுகிறது







மூளாய் -கட்டுவன்-வயாவிளான் - அச்சுவேலி 1966

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
10.08.2013
சனிக்கிழமை
கேவலார் புனிததேவாலயத் திருவிழாவில் எங்கள்
அதிரடி மலிவு விற்பனை
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



எங்கள் நிறுவனத்தின் 19 வது ஆண்டு நிறைவில்
உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!
Travel AIR
www.travelair.de
email:info@travelair.de
Tel: 0202/4936921 , Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Luisen Str.46 , 42103 Wuppertal



# யேர்மனில் ஓடும் ரயிலில் பிறந்த பெண் குழந்தைக்கு வாழ்நாள் முழுவதும் ரயில்பயணம் இலவசம்!

## Lifetime travel pass for baby born on train

**A baby girl had a high-speed start to life on (08.08.2013) Thursday morning when her mother gave birth on a train in eastern Germany. The lucky new-born will be able to travel for free in the area for the rest of her life.**





## பதுங்கு குழிகளில் பிறந்த நம்குழந்தைகளுக்கும் வாழ்நாள் வசதிதரும் கௌரவம் வழங்கலாமே!

யேர்மனில் ஓடும் ரயிலில் பிறந்த பெண் குழந்தைக்கு வாழ்நாள் முழுவதும் இலவ சமாக ரயிலில் பயணம் செய்யும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் நாட்டில் நிறைமாத கர்ப்பிணி ஒருவருக்கு ரயிலில் பயணம் செய்த போது திடீரென்று பிரசவவலி ஏற்பட்டுள்ளது.

அப்போது ரயிலில் மருத்துவர்கள் யாரும் இல்லை என்பதால் அதில் பயணம் செய்த இரண்டு பெண்கள் அப்பெண்ணுக்க பிரசவம் பார்த்துள்ளனர்.

இதில் அழகான பெண் குழந்தையை பெற் றெடுத்த அப்பெண் தற்போது எலிசபெத் மருத்துவமனையில் தன் குழந்தையுடன் நலமாக உள்ளார்.


இது குறித்து தெற்கு பிராந்திய கிளை தலைவர் பிராங்க் ஹெலின்காபர் (Frank Klingenhöfer) கூறுகையில், அந்தக் குழந் தையானது தனது வாழ்க்கை பயணத்தை ரயிலில் தொடங்கியுள்ளது.

இதனால் வாழ்நாள் முழுவதும் இலவசமாக ரயிலில் பயணம் செய்யலாம் என்று கூறியுள்ளார்.
ஒரு ரயில்பயணத்தில் நடந்த பிரசவத்திற்கு இப்படி ஒரு கௌரவம் தேவைதான்.

இதனைப் பின்பற்றி பதுங்கு குழியில் போர்ச்சூழலில் பிறந்த குழந்தைகளுக்கும் அந்த அந்த நாடுகளில் பதுங்கு குழி இலவசம் என்று வழங்காமல்,

இப்படி ஏதாவது ஒரு வாழ்நாள் வசதிதரும் உதவிக் கௌரவம் வழங்கலாமே!


## சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள் அவர்களின் வாழ்க்கை வரலாறு அடங்கிய புத்தக வெளியீடும், அகில உலக கலாச்சார மண்டப அடிக்கல் நாட்டு வைபவமும்.



இந்து சமயமும், உலகம் போற்றும் எமது கலாச்சாரமும் ஐரோப்பிய மண்ணில் தழைத் தோங்கிட அயராது சேவை யாற்றும் சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் 50வது பிறந்ததினமான 13.09.2013 அன்று ஆலய ஆதீன கர்த் தாவான சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்களின் வரலாறு அடங்கிய புத்தக வெளியீடும், அகில உலக கலாச்சார மையம், அன்னதான மண்டபம் ஆகியவற்றின் அடிக்கல் நாட்டு வைபவமும் நடைபெறும்.
இவற்றைத் தொடர்ந்து பல கலைநிகழ்சிகளும் நடைபெற விருக்கிறது.
காலை 7.30 மணி கணபதி ஹோமம், காலை 8.00 மணி காலைப் பூஜை, காலை 9.00 மணி ஸ்ரீ ஆதி சங்கரருக்கு விசேட அபிசேக, அலங்காரம் காலை 10.00 மணி சர்வ அலங்காரத்துடன் ஸ்ரீஆதிசங்கரர் உள்வீதி வலம் வருதல், 12.00 மணி மதிய பூஜை, 13.00 மணி மதிய போஜனம் 14.00 விழா ஆரம்பம்,14.05மணி மங்கள வாத்தியத்துடன் குருக்களை அழைத்து வருதல்,14.20 மணி ஆலய ஆதீன கர்த்தா அவர்கள் கௌரவிப்பு, 15.45 மணி புத்தக வெளியீடு, 16.00 மணி சிறப்பு விருந்தினருக்கு புத்தக பிரதி வழங்கல்,16.20 மணி அடிக்கல் நாட்டல். 16.30 மணி கலை நிகழ்ச்சிகள் ஆரம்பம். மேற்படி விழா கம் காமாட்சி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம்பெறுகின்றது.







# யுத்தம் முடிந்தது தெரியாமல் நாற்பது ஆண்டுகள் வியட்நாம் காட்டுக்குள் வாழ்ந்த அதிசயமனிதர்!





நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வியட்நாம் போரின் போது காணாமல் போன ஒரு தந்தையும் அவரது மகனும், அங்கு ஒரு காட்டுப் பிரதேசத்தில் வசித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் அல்ல ஒருமாதம் அல்ல ஒருவருடமல்ல நாற்பது ஆண்டுகள் ஒரு மனிதன் எந்த மக்களுடனும் தொடர்பின்றி தன்னந்தனியாக காட்டில் வாழ்வது என்பது நம்பக்கூடியகாரியமா? ஆனால் உண்மை.

தற்போது 82 வயதாகும் ஹோ வான் தான் மற்றும் அவரது மகன் ஹோ வான் லாங் (41) ஆகிய இருவரும் வியட்நாம் போரின் (1973) போது ஒரு குண்டுத் தாக்குதலில் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டதை அடுத்து தாங்கள் வசித்து வந்த கிராமத்தை விட்டு வெளியே தப்பியோடிவிட்டதாகக் கூறப்படுகிறது. வியட்நாமின் மத்திய பகுதியில் இருக்கும் குவாங் இங்காய் மாகாணத்தில் உள்ள ஒரு காட்டுப் பகுதியில் அப்பகுதிவாசிகள் சுள்ளி சேகரிக்கச் சென்றிருந்த போது இவர்கள் இருவரையும் கண்டனர்.

தரை மட்டத்திலிருந்து சுமார் ஐந்து மீற்றர் உயரத்தில் உயர மரக்குடிசையைக் கட்டி வெளியுலகத் தொடர்பே இல்லாமல் அவர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

தந்தைக்கு சிறுபான்மை மொழியான கோர் மொழி கொஞ்சம் பேசத் தெரியும். மகனுக்கு அதில் ஒரு சில வார்த்தைகளை மட்டுமே பேச முடியும்.

உணவு உடை மருத்துவசதி வீடு இவை ஏதும் இன்றி ஏன் பேச்சுக்கு ஒருதுணையும் இன்றி, இன்னும் சொல்லப்போனால் ஒரு செல்போன்கூட இன்றி எப்படித்தான் வாழ முடிந்தது.

உணவுக்கு பழம் மற்றும் கிழங்குகளை சாப்பிட்டு இந்த இருவரும் உயிருடன் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் சோளமும் பயிரிட்டனராம். உடைக்கு மர ஆடைகள் தயாரித்தும் மரத்தில் வீடு அமைத்தும் ஒரு கற்கால வாழ்க்கையை தற்காலத்தில் வாழ்ந்து முடித்திருக்கிறார்.

அன்று யுத்தத்தில் ஆடைகளை கழைந்து விட்டு ஓடிய சிறுமிக்கு கனடா அடைக்கலம் கொடுத்தது.

நாட்டைவிட்டு ஓடியவருக்கு சொகுசு வாழ்வும் காட்டுக்குள் ஓடியவருக்கு வனவாசமும் இயற்கை அளித்துள்ளது.

இவ்வளவு ஆண்டுகாலமாக எந்தமனிதரின் கண்ணிலும் சிக்குப்படாமல் வாழ்ந்தது ஆச்சரியமானதே. முக்கியமாக மனைவியைப் பறிகொடுத்த ஏக்கம் துயரம் அவரது மனநிலையைப் பாதித்து இருக்கலாம்.அதனால் யுத்தம் முடிந்ததுகூட தெரியாமல் காட்டுக்குள்ளேளே கட்டுண்டு இருந்திருக்கலாம். உலகில் இன்னும் எத்தனை காடுகளுக்குள் எவ்வளவு மனிதர்கள் வாழ்வார்களோ என்று எண்ணத்தோன்றிவிட்டது இவரது வாழ்க்கை.




வியட்நாம் மீது 1972ம் ஆண்டு நேபாம் குண்டுகளை அமெரிக்க விமானப் படை வீசியது. தன்னுயிரைக்காக்க வெட்கத்தைத் துறந்து ஆடை யினைக் கழைந்து நிர்வாணமாக ஓடும் இச்சிறுமி, இன்று 45 வயதைக் கடந்து விட்டாள்.

இந்தப் புகைப்படம் எடுத்தவரும், புகைப் படத்துக்குரியவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டால் எப்படி இருக்கும்.

காலம் துன்பங்களைச் சிரிப்பாகவும், மாற்றும் சக்தி கொண்டது.

அன்று பயந்து நடுங்கிய சிறுமி இன்று நடனமாடி அக்காட்சியினை நினைவு கூருகிறார்.

உடைகளைக் கழற்றி விட்டு இந்தச் சிறுமி ஓடும் படத்தை முன்னணி புகைப்பட செய்தி நிறுவனம் AP புகைப்படக்காரர் நிக்கூட் எடுத்தார்.

உலகப் புகழ் பெற்ற இப்புகைப் படத் திற்காக மிக உயரிய புலிட்சர் விருது பெற்றார் உட்.

அந்த சாதனையாளரும், அதற்குக் காரணமான சிறுமி கிம் புக்கும்தான் இவர்கள். கலிபோர்னியாவில் Church ஒன்றில் சந்தித்தனர்.

அன்று அவலத்தில் சிறுமியாக கைகளை உயர்த்தி தான் காட்டிய பரிதாப நிலையை, இன்று சிரித்தபடி நிக்கிடம் செய்து காட்டுகிறார் கிம்.



டோட்முண்ட் நகரில்....

# KAILAS Fisch- Feinkost

இலங்கை, இந்தியா மற்றும் உலகின் பலநாடுகளுக்கும்
துரிதகதியில் பணம் அனுப்ப இன்றே நாடுங்கள்

VALUTRANS MONEY TRANSFER

VALUTRANS

HNB

Bank of Ceylon BOC

NSB National Savings Bank

instant cash

Tel:0231 137 433 95

இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெற்றுக்கொள்ளலாம்



## கடல் உணவு வகைகள் எம்மிடம் தாராளமாகக் கிடைக்கும்!

Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை



பசுமையான
உடன்
மரக்கறி
வகைகளுக்கும்
எம்மை
நாடுங்கள்



Adler Str.05
44137 Dortmund

டோட்முண்ட் நகரில்
இதோ கடல் உணவுக்கு
ஓர் கடை

Handy:163 47 60 857-163 47 60 237

web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de

# உளநோய் கையேடு (DSM 5) திருத்தமும் விளைவுகளும்
## Dr. Allen Frances உடன் ஒரு நேர்காணல்

Dr. புஷ்பா கனகரட்டணம்



ROB: எத்தனை பேர்? ALLEN: 7% மக்கள்
ALLEN: 7, ஆமாம். இப்பொழுதெல்லாம், அவசரசிகிச்சை பிரிவிற்கு (emergency) செல்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது தெருவோர போதைமருந்து பாவனையை விட மருந்து சீட்டு மருந்துகளின் அதிகூடிய பாவனையாலேயே. ஒருவகையில், உங்கள் குடும்ப வைத்தியரிடம் நீங்கள் பெற்றுக்கொள்ளும் மருந்து, தெருவோரம் சட்டவிரோதமாக கிடைக்கும் மருந்துகளை விடவும் ஆபத்தாக இருக்கிறது. அதனால், என் கருத்து என்னவெனில், நோய் அடையாளம் காணுதலும், மருந்து பாவனையும், அதீதமாகி விட்டது. போதாததற்கு, புது நோய்நிலைகளை DSM 5 அறிமுகப்படுத்துவது நிலைமையை இன்னும் மோசமாக்க போகிறது. DSM 5 பதிப்பில் வரும் முதல் நாள் நோயில்லாதவர்களாக கருதப்படுபவர்கள் பலர், பதிப்பில் இந்த கையேடு வந்த மறு நாள் உளநோய் இருப்பதாக அடையாளம் காணப்படுவார்கள். சில நோய்நிலைகளுக்கான வரம்புகள் DSM 5 இல் தளர்த்தப்பட்டிருப்பதால் இது நோய்நிலை வீக்கத்தையும் (diagnostic inflation) நோயில்லாதவர்கள் மத்தியில் தேவையற்ற மருத்துவ பாவனையையும், நோய் இன்றியே நோயடையாளம் காணப்படுவதால் ஏற்படும் தேவையற்ற வடுவையும் அதிகரிக்கும்.

ROB: இது மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பெருத்த லாபம் அல்லவா?
**ALLEN:** ஆமாமாம். ஒன்று தெளிவாக சொல்லவேண்டும். DSM உருவாக்கத்தில் மருந்து நிறுவனங்கள் பங்களிப்பு செய்யவில்லை. DSM குழு இவர்களுக்கு உதவும் நோக்கத்தில் வேலை செய்யவில்லை. ஆனால், பல பிழையான முடிவுகளை எடுக்கிறார்கள். எப்படி DSM திருத்தங்களை தமக்கு சாதகமாக்கிக் கொள்ளலாம் என்று மருந்து நிறுவனங்கள் நாக்கை தொங்கப் போட்டு கொண்டு காவல் இருக்கின்றன.
ROB: அப்படியானால், இது ஏன் நடக்கிறது என நினைக்கிறீர்கள்? பிழையான முடிவுகளை ஏன் எடுக்கவேண்டும்?
ALLEN: பிழைகள் பண அடிப்படையில் இல்லை. அறிவுசார்ந்த பிழைகளே. உங்கள் துறையில் நீங்கள் நிபுணரானால், உங்களுக்கு உங்கள் வேலையில் ஒரு அதீத ஆர்வம் இருக்கும். உங்கள் துறையை இன்னும் விரிவடைய செய்யவேண்டும் என விரும்புவீர்கள். அதனாலேயே, யாரிடமாவது நோய்நிலையை அடையாளம் காணாமல் விட்டு விடுவீர்களோ என்ற கவலை இருக்கும். உங்கள் ஆய்வுகள், வாசிப்புகள் உங்கள் துறையில் விரிவடையும் போது, புதிது புதிதாக நோய நிலைகளை அடையாளம் காண ஆரம்பிப்பீர்கள். நோயற்றவர்கள் உள்பட. பொதுவாகவே, உளநல துறையில் மட்டுமல்ல. வைத்தியதுறையில் அதிகரித்து வரும் வழக்கம் என்னவென்றால், நோய் ஆரம்பிக்க முன்னரே முற்காப்பாக இருக்க வேண்டும் என்று எல்லாவிதமான பரிசோதனைகளையும் (screening) செய்வது தான்.
சில பரிசோதனைகளோ, நோயின் அபாயத்தை விட அபாயமான விளைவுகளை கொடுக்கலாம். உதாரணமாக, prostate cancer பரிசோதனைகளை இப்பொழுது அவதானமாக செய்ய வேண்டும் என்ற விழிப்புணர்வு வந்திருக்கிறது. மார்பு புற்றுநோய் பரிசோதனைகள் தேவையற்ற அளவு அதிகரித்திருக்கின்றன. 46 மருத்துவ துறைகளில் அதீத பரிசோதனைகளும் சிகிச்சையும் நடைபெறுவது அடையாளம் காணப் பட்டிருக்கிறது. துரதிருஷ்ட வசமாக, இந்த பட்டியலில் இப்பொழுது உளநல மருத்துவமும் இணைகிறது. உளநல துறையில் (psychiatry), நோய் ஏற்படும் முன் நோய்நிலையை அடையாளம் காண உகந்த வழிமுறைகள் எம்மிடம் இல்லை. எந்த சிகிச்சை முறைகள் நிச்சயமாக உதவும் என்பதற்கும் முழு ஆதாரம் இல்லை.
Rob: நீங்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல், குடும்ப வைத்தியர்களே பெரும்பாலும் உளநல நோய்களுக்கான மருந்துகளை எழுதிக்கொடுக்கிறார்கள் என்றால், அது உளநல மருத்துவர்களின் (psychiatrists) தொழிலுக்கு பங்கமாக அல்லவா இருக்கிறது?
ALLEN: இது உளநல மருத்துவர்கள் வயிற்றில் அடிக்கும் பிரச்சனை அல்ல. அவர்களுக்கு இருக்கும் வேலையே போதியதாக இருக்கிறது. சிக்கல் எங்கு என்றால்இ ஒரு திட்டவட்டமான உளநல நோய்நிலையை அடையாளம் காண ஒருவரை நீண்ட காலம் தெரிய வேண்டும். முக்கியமாகஇ உக்கிரம் குறைந்த (அடைன)இ சாதாரண நிலைக்கும் அசாதாரண நிலைக்கும் இடையில் இருக்கும் ஒரு நோய்நிலையை அடையாளம் காண அதிக பயிற்சி தேவை. தெள்ளதெளிவான நோய் நிலையை அடையாளம் காண்பது சுலபம். திடுதிப்பென்று ஒரு முடிவுக்கு (diagnosis) வந்துவிட முடியாது. அவதானிப்போடு கண்காணிப்பது தான் முக்கிய முதல் படி. உக்கிரம் குறைந்த நோய்நிலைகள் உள்ளவர்களில் பாதி பேருக்கு சில வாரங்கள் போக தானாகாவே பிரச்சனைகள் குறைந்துவிடும். அதற்கு மாறாக, வைத்தியர் காரியாலயம் போனால், உடனடி நோய்நிலை அடையாளம் அத்தோடு மருந்து. பாதிப்பேருக்கு இது ஆறுதல் மருந்து (placebo effect). அதாவது, மருந்து எடுத்துவிட்டோம் என்ற நம்பிக்கையிலேயே நோய் மாறிவிடும். எதனால் நோய் மாறிற்று என அவர்களுக்கு புரியாது. தம் திறமையால் தான் தாம் குணமடைந்தோம் என அறியாமல், மருந்தால் தான் குணமடைந்தோம் என தப்பாக முடிவெடுத்து விடுவார்கள். நாடு என்ற மட்டத்திலேயே, மக்களின் இயல்பான விரிவாற்றலில் (resilience) நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.
முக்கியமாக மிதமான பிரச்சனைகளுக்கு. தேவையற்றவர்களுக்கு மருந்து கொடுத்து நோயாளியாக்குகின்றோம். அதே நேரம், ஆழ்ந்த மன அழுத்தம் (severe depression) உள்ளவர்களில் மூன்றில் ஒரு பங்கினரே ஒரு துறைசார் நிபுணரை அணுகுகிறார்கள்.
Rob: மக்களுக்கு வடுவை ஏற்படுத்தும் நோய்நிலைகள் எதுவென்று கூறுவீர்கள்?
Allen: Schizophrenia அதீத இழுக்கை ஏற்படுத்துகிறது. ஆனால் அதிக பிழையாக அடையாளம் காணப்படுவது bipolar disorder, அதாவது மட்டுமீறிய பேரார்வமும் மன அழுத்தமும் மாறி மாறி வரும் நிலை. உதாரணமாக, கடந்த 15 வருடங்களாகவே பிள்ளைகளை bipolar disorder இருப்பதாக தவறாக அடையாளம் காண்பது ஒரு ஆர்வக்கோளாறாக இருந்து வருகிறது. ஆனால் இங்கு முக்கியமான விடயம் ஒன்றை சொல்லவேண்டும். நான் சொல்வதை கேட்டு மக்கள் தம் மருந்தை நிறுத்திவிடக்கூடாது. நோய்நிலை சரியாக அடையாளம் காணப்படும் போது, வைத்தியர் கொடுத்திருக்கும் மருந்தை உங்கள் பாட்டில் நிறுத்திவிடுவது ஆபத்தானது. உங்களுக்கு தேவையற்ற மருந்தை எடுத்து கொண்டு இருப்பதும் ஆபத்தானது. ஆகவே, உங்கள் நோய் அறிகுறிகளை நன்கு அவதானித்து, அவற்றை உங்கள் குடும்பத்தினர், வைத்தியர் என்று பலரோடும் கலந்துரையாடி நல்ல முடிவுகளை எடுக்கும் புத்தியுள்ள நுகர்வோராக நாம் இருப்பது அவசியம்.

எங்கள் நாட்டில் தேவையற்று மருந்தெடுப்பது, தேவையானபோதும், மருந்தை எடுக்காமல் விடுவது, இப்படி இருமாதிரியான பிரச்சனைகளும் இருக்கின்றன. ஆகையால், உங்கள் நோய் அறிகுறிகள் பற்றி வைத்தியருடன் கலந்தாலோசியுங்கள். அவர்கள் பதிலில் உங்களுக்கு திருப்தி இல்லையெனில், வேறு நிபுணர்களை அணுகி இரண்டாம், மூன்றாம் அபிப்பிராயம் என பெற்றுக்கொள்ளுங்கள். உளநோய் மருந்துகள் எடுப்பதா விடுவதா என்பது உங்கள் வாழ்க்கையில் ஒரு முக்கிய முடிவு. நீங்கள் யாரை திருமணம் செய்யப்போகிறீர்கள், என்ன வாகனம் வாங்கப் போகிறீர்கள், எந்த வீட்டை வாங்கப்போகிறீர்கள் என்ற முடிவுகளுக்கு எவ்வளவு தூரம் சிந்திப்பீர்களோ அதே போல் இதனையும் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஒரு குடும்ப வைத்தியரிடம் 7 நிமிட ஆலோசனையின் முடிவில் பெற்றுக் கொள்ளும் விடயமல்ல இது. அதே போல், இந்த பேட்டியை கேட்டுவிட்டு நீங்களாகவே மருந்தை நிறுத்துவதும் செய்யக்கூடாத விடயம். இந்த முடிவு மேற்போக்கியலற்ற (serious) ஒரு முடிவாக இருக்கவேண்டும்.

GAAYATREE PARTY SERVICE
உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.
கொத்துரொட்டி
புரியாணி
நூடில்
தந்தூரிச்சிக்கன்
இறால் சம்பல்
இறால் கறி
இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.
e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck

Gaayatree Party Service

10 Years
Kaneen electronics
www.kaneenelectronics.de
புதியதோர் தொழில் நுட்பம்!!!!! புதியதோர் வாய்ப்பு!!.
Full HD,SDமுறையில் அனைத்து நிகழ்வுகளையும் Video-Photo செய்யவும்,சிறந்த முறையில் படத்தொகுப்பு செய்யப்பட்டு, Blue Ray DVD பதிவுக்கும்அனைத்து நிகழ்வுகளை விழா நடக்கும் இடத்தில் இருந்து செய்மதிமூலம் உலகெங்கும் நேரடி ஒளிபரப்பு செய்வதற்கும் மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் இவை அனைத்தும் மாதாந்த தவணை முறையில் வங்கியூடாக பெற்றுக் கொள்வதற்கும்
Schevenhoferweg-24 42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de

# "இந்த வெயிலில் நீ எங்கே போயிருப்பாய்"

**நெடுந்தீவு முகிலன்**

சாணம் தடவிய திண்ணையில் - நீ நடந்த
கால் அடையாளம் இருக்கிறது.

முந்தநாள் நீ போட்ட பூப் பாவடை கொடியில் காய்கிறது.

பசு மாடு கட்டியிருந்த பலா மரத்தின் கீழ் - நீ
கூந்தல் கட்டும் நீல நாடா கிடக்கிறது.

சந்திக் கிணற்றுக்கு நீ தண்ணீர் அள்ள கொண்டு வரும்
செப்பு குடம் கதிகால் அருகில் திருகணியில் இருக்கிறது

பின் கிணற்றில் செம்பரத்தம் இலை பிசைந்த சிரட்டையில் - உன்
ஓர் இரு கூந்தல் முடிகள் "நிலமும் ஈரம் காயவில்லை"
சற்று முன்னம் தான் நீ குளித்தும் இருக்கிறாய்.

பச்சை சுள்ளி விறகுகள் முற்றத்தில் காய்கிறது.
உலைப் பானையும் வெளி அடுப்பில் கொதிக்கிறது.

மலசல கூட கதவு திறந்து கிடக்கிறது
படலை சாத்திக் கிடக்கிறது.

"இந்த வெயிலில் நீ எங்கே போயிருப்பாய்"

ஒரு வேளை வயல் உழும் உன் அப்பனுக்கு காலை கஞ்சி
கொண்டு போயிருப்பாயோ -

## நீ எதிரே வருகையில்.

வணக்க முறையாக
மூக்கோடு
மூக்கு உரசுபவர்கள்,

முத்தமிட்டுப்
புன்னகைப்பவர்கள்,

கட்டியணைத்து
தட்டிக் கொடுப்பவர்கள்,
இப்படியான
ஒரு தேசத்தில் இல்லாமல்
போனதைக் குறித்து
கவலைப்படுகிறேன்.

நீ எதிரே வருகையில்.

**சேவியர் -தமிழ்நாடு**









15ம் பக்கத் தொடர்ச்சி

## இந்தியாவை திருப்திப் படுத்தவே..



விமானியாக ராஜீவ் காந்தி

கேள்வி: ராஜீவ் தாக்குதலை எவ்வாறு சுதா கரித்துக் கொண்டார் என நீங்கள் நினைக் கிறீர்கள்?
பதில்: எனது நிழல் அசைவில் ஏதோ நடக்கப் போகின்றதை ராஜீவ் உணர்ந்து கொண்டார் என இச் சம்பவத்தின் பின்னர் தெரிந்து கொண்டேன். அரசியலுக்கு வருவதற்கு முன்பு அவர் விமானியாக தொழில் புரிந்ததால் அசைவுகளை அறிந்து கொள்ள முடிந்திருக்கும்.
கேள்வி: தாக்குதலின் பின்னர் என்ன நடந்தது?

பதில்: அடிவாங்கிய ராஜீவ் என்னை ஏறெடுத்துப் பார்த்தார். அதன் போது பாதுகாப்பிற்கு வந்த 'பிளக்கெட்' ஒருவர் எனது வயிற்றில் ஓங்கி ஒரு குத்துவிட்டார். நான் கீழே விழுந்தேன். அதன் பின்னர் அணிவகுப்பு மரியாதை நிறுத்தப்பட்டது. ராஜீவ் ஒரு வாகனத்தில் ஏறி அங்கிருந்து வெளியேறினார்.
கேள்வி: நீங்கள் கீழே விழுந்த பின்னர் என்ன நடந்தது?
பதில்: அணி வகுப்பிற்கு பொறுப்பான அதிகாரி என்னை பரிசோதித்தார். பின்னர் விசேட அதிரடிப்படை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு கடற்படை தலைமையகத்திற்கு கொண்டு சென்றனர்.பகல் உணவு கிடைத்தது. பின்னர் அன்றைய கடற்படை தளபதி திஸர சமரசிங்க என்னை இரகசிய பொலிஸாரிடம் கையளித்தார்.
கேள்வி: கடற்படையினர், கைது செய்யப்பட்ட பின்னர் தாக்கினார்களா?
பதில்: இல்லை, எதற்காக என்னைத் தாக்க வேண்டும்.
கேள்வி: இரகசிய பொலிஸாரின் பாதுகாப்பில் சிறைக்கூடத்திலா இருந்தீர்கள்?
பதில்: இல்லை, ஆபீஸ் ஒன்றிலேயே இருந்தேன். ஒருநாள் அதிகாரியொருவரின் பொய்யான முறைப்பாடு காரணமாக அன்று இரகசிய பொலிஸ் பணிப்பாளரான சந்திரா ஜயவர்தன எனது கன்னத்தில் அறைந்தார். அதைவிடுத்து ஏனைய அனைவரும் என்னோடு அன்பாகப் பழகினார்கள்.
கேள்வி: உங்களை பார்வையிட அரசியல்வாதிகள் எவராவது வந்தார்களா?
பதில்: இல்லை, எவருமே வரவில்லை. என்னை விடுதலை செய்த தினத்தில் ஸ்டான்லி திலகரத்ன வந்தார். இவர் தான் எனது வழக்கில் ஆஜராகி வாதாடினார். ஆனால், அவரோடு வெளியேறுவதை நான் நிராகரித்தேன். சிறைச்சாலை பஸ்ஸில் என்னை புறக்கோட்டையில் இறக்கி விட்டனர். நான் தனியாக காலியிலுள்ள எனது வீட்டிற்கு பஸ்ஸில் சென்றேன்.
கேள்வி: உங்களுக்கு எதிரான வழக்கு?
பதில்:கொலை எத்தனிப்பு குற்றச்சாட்டில் கடுமையான வேலையுடன் 6 வருட சிறைவாச தீர்ப்பை இராணுவ நீதிமன்றம் வழங்கியது.
கேள்வி: இராணுவ நீதிமன்றத்தில் உங்களது வழக்கை யார் விசாரித்தார்கள்?
பதில்: கேர்ணல் விஜய விமலரத்ன, கொமாண்டர் கே.ஏ.பெரேரா மற்றும் குரூப் கப்டன் புத்தி சிறிவர்தன ஆகியோராவர். இறுதியில் இந்தியா வை திருப்திப்படுத்தும் தீர்ப்பு வழங்கப்பட்டது.
கேள்வி: அன்று நீங்கள் செய்தது பயங்கரமான விடயமென்று நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?
பதில்: இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ராஜீவ் எமது நாட்டை ஆக்கிரமித்த சர்வாதிகாரி.
கேள்வி: ராஜீவை கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடனா நீங்கள் தாக்குதல் நடத்தினீர்கள்?
பதில்: கொலை செய்யவே தாக்குதல் நடத்தினேன். இதில் கேள்விக்கு இடமில்லை. எப்படியாவது உடன்படிக்கையை இரத்துச் செய்ய வேண்டுமென்பதே எனது நோக்கமாக இருந்தது.
கேள்வி: உங்களுக்கு எதிரான வழக்கில் வாதாடிய சட்டத்தரணி யார்?
பதில்: சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்டான்லி திலகரட்ன தலைமையில் பதின்மூன்று சட்டத்தரணிகள் ஆஜரானார்கள். ஆனால், ஒரு சதமேனும் கட்டணம் பெறவில்லை. இலவசமாகவே வாதாடினார்கள்.
கேள்வி: சிறையில் உங்களுக்கான உபசரிப்பு எப்படி இருந்தது?
பதில்: சிறை சென்றபோது கைதிகள் கைதட்டி ஆரவாரத்துடன் ஒரு வீரனைப் போல் என்னை வரவேற்றார்கள்.
அங்கு புரோட்டின் சத்துடைய சிறந்த உணவு எனக்கு வழங்கப்பட்டது. லக்ஸ்பிறே மா, சீனியும் பிரத்தியேகமாக வழங்கப்பட்டது.
கேள்வி: விசேட உணவு உபசரிப்பு கிடைப்பதற்கு என்ன காரணம்?
பதில்: அன்று சிறைக்குள் இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென்ற போராட்டத்தை கைதிகள் மேற்கொண்டனர். இதன்போது என் மீது துப்பாக்கி சூடுபட்டது.
கேள்வி: இவ் ஆர்ப்பாட்டத்தில் நீங்களும் கலந்துகொண்டீர்களா?
பதில்: இல்லை, இவ் ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த கண்ணீர் புகை பிரயோகிக்கப்பட்டது. நானும் அதில் சிக்கிக்கொண்டேன். பின்னர் கண்களை கழுவுவதற்காக நீர்தொட்டிக்கு அருகே சென்ற போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக் கானேன்.அதன் பின்னர் சிறையிலிருந்து விடுதலையாகும் வரை புரோட்டின் சக்தியுடைய உணவே எனக்கு வழங்கப்பட்டது.
கேள்வி: சிறையிலிருந்து எப்போது விடுதலை யானீர்கள்?
பதில்: 1990 ஏப்ரல் 2ஆம் திகதி விடுதலையானேன்.
கேள்வி: விடுதலையின் பின்னரான உங்கள் வாழ்க்கை?
பதில்: அரசியலில் ஈடுபட்டேன். வர்த்தகத்தை மேற்கொண்டேன். காலி - கொழும்பு இன்ரர்சிட்டி பஸ் சேவையையும் நடத்தினேன்.
கேள்வி: வர்த்தகம் செய்வதற்கு எங்கிருந்து பணம் கிடைத்தது?
பதில்: சிறையில் இருக்கும் போது நான் பாடல்கள் எழுதினேன். 100 பாடல்கள் எழுதினேன். விடுதலையின் பின்னர் அவற்றை ஒளிப்பதிவு செய்தேன். எனது இரண்டாவது ஒலிப்பதிவின் கசட்டுகள் 15000 விற்பனையாகின. இதன் மூலம் பஸ்ஸொன்றை கொள்வனவு செய்தேன். ஆனால், அதில் நஷ்டமடைந்தேன்.
கேள்வி: இந்தியாவை எதிர்க்கின்றீர்களா?
பதில்: இல்லை. நான் இந்தியாவுக்கு எதிரானவன் அல்ல. இந்திப் பாடல்களை நான் ரசித்துக் கேட்பேன்.
ஆனால், ராஜீவ்காந்தி என்ற ஆக்கிரமிப் பாளனையே எதிர்த்தேன். அத்தோடு பலாத் காரமாக எம் மீது திணிக்கப்பட்ட உடன்படிக் கையை எதிர்த்தேன். 13 பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பதால் எதிர்த்தேன்.
கேள்வி: இச் சம்பவத்தின் பின்னர் இந்தியாவுக்கு சென்றீர்களா?
பதில்: ஆம். புனித யாத்திரை குழுவொன்றுடன் இந்தியா சென்று வந்தேன். இது யாருக்கும் தெரியாது. எந்தவிதமான பிரச்சினையும் இன்றி போய் வந்தேன்.
கேள்வி: நீங்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவரா?
பதில்: இல்லை. நான் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்ல. ஆனால், நாட்டை பிரிக்கும் 13ஆவது திருத்தத்தை மாகாண சபை முறைமையை எதிர்ப்பவன்.
இன்று வட மாகாண சபை தேர்தல் நடத்தப்படவுள்ளது. இதன் பின்னராவது யாழ்ப் பாணத்து மக்களுக்கு தங்களுக்கு வெளிநாடு செல்வதற்கான கடவுச்சீட்டை தேசிய அடையாள அட்டையை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள முடியுமா?
முடியாது, கொழும்புக்கே வர வேண்டும். எனவே, மாகாண சபைகளால் இம் மக்களுக்கு பலனில்லை.
எனவே, நிர்வாகத்தை பரவலாக்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.
இதன் மூலம் மக்கள் தாம் வாழும் பிரதேசங் களிலேயே தமக்கான சேவைகளை பெற்றுக் கொள்ளும் முறைமையை உருவாக்க வேண்டும். மாகாண சபைகள் 'வெள்ளை யானை' இது தீர்வை வழங்காது.

கேள்வி: நாட்டின் இன்றைய நிலை?
பதில்: நான் அன்று இலங்கைக்கு எதிரான ராஜீவ் காந்தியின் ஆக்கிரமிப்பை துணிச்சலாக எதிர்த்தேன்.

ஆனால், இன்று எமது நாடு இந்தியாவிற்கு அடிமையாகி அதன் காலனித்துவ நாடாக மாறி வருகிறது. இது மிகவும் கவலையளிக்கின்றது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியதி காரத்திற்கு வந்தவுடன் தனக்கிருந்த மூன்றி லிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தி 13ஐ ஒழித்திருக்க வேண்டும். ஆனால், அதனைச் செய்யாததன் பலன் இன்று விசுவரூப மெடுத்துள்ளது.
நன்றி:வீரகேசரி- நேர்காணல் - ப.பன்னீர்செல்வம்.

BCN Travals
நம்பிக்கையான விமானச் சேவை
Consulting Network(TBW)UG
இலங்கை-இந்தியா-கனடா-அமெரிக்கா-அவுஸ்த்திரேலியா-சிங்கப்பூர்-மலேசியா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சீட்டுக்களைப் பெற்றுத்தருகின்றோம்.
அத்தோடு உங்கள் திட்டங்களை எளிதாகவும் தன்னிச்சையாகவும் நிறைவேற்றுவதற்கான ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் நாங்கள் வழங்குகின்றோம். (சிறுதொழில்-முதலீட்டுத்திட்டம்-பொருளாதாரதேவை)
Handy:0231 98 53 94 16
BCN Travals
Tel: 0231-10876361
Adler str-30
44137Dortmund
இந்தியா செல்வதற்கான விசாவினையும் பெற்றுத் தருவோம்
மின்னஞ்சல் :-bcntravels@hotmail.de - Web:-www.bcn.ug.com


Dortmund நகரில் வெற்றிமணி விழா
14.Spt.2013
சனிக்கிழமை
5:00Pm
பேச்சுக்கு
நேரமில்லை!
மூச்சுக்கு மூச்சு
ஆட்டம் பாட்டம்!
கொண்டாட்டம்.
முத்தான
பழைய
புதிய
பாடல்களும்
பைரவன்
அல்பப் பாடல்களும்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
Rohini
Sanje's
Bhairavan
ALBUM RELEASE
N.S.K.Ramiya
McJeeva
கடந்த ஆண்டு
வரத்தவறிவர்களுக்கு
அரியசந்தர்ப்பம்
மீண்டும்
உங்கள் பல்ராம்
Xavier
Sajith
viji
அன்பளிப்பு:
பிரவேசம் 3 யூரோ
மட்டுமே
(10 வயதிற்குட்பட்டவர்களுக்கு
இலவசம்!)
Hall:
Diertrich KeuningHaus
Leopold Str.50-58
44147 Dortmund
Gegenueber von Hauptbahnhof
hinter Eingang
Mathangi



Tel:0231 837848
MS Video Movie
FullHD 1080p
Professional Video& photo Shooting
உங்கள் வீட்டில் விஷேசமா
எங்களுக்கு போன் பண்ணுங்க...
M.Sakthi 0172 23 22 672
www.fotoschnellservice.net
Foto Schnell service
Münster Str.31
44145 Dotmund
கலைநயத்துடன் அழகுறப் படம்பிடித்துத் தருகின்றோம்.

# கேள்வியாயும் .... உண்மையாயும் ஒரு தேடல்!

ஏலையா க.முருகதாசன்




நாம் வாழுகின்ற பூமியைப் போன்று நாம் அறிந்து கொண்ட, அறிந்து கொண்டிருக்கின்ற கோள்களை விட இன்னும் இன்னுமதிகமாகவே பிரபஞ்சத்தில் கோள்கள் மிதக்கின்றன. சூரியக் குடும்பக் கோள்களைப் போல அதற்கப்பால் எல்லையற்ற பிரபஞ்ச சூனிய வெளியில் ஒன்றுக்கொன்று ஈரப்பு விசையினால் சுற்றி வருகின்றன. இக்கோள்கள் யாவும் வலதுபுறமாகாத்தான் சுற்றி வருகின்றன என்பதில்லை.அவை இடது புறமாகவும் சுற்றிவருபவையாகக்கூட இருக்கலாம்.
சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களை சூரிய சக்தி இயக்குகின்றது. சூரியன் ஒரு திண்மையான கோள் அல்ல கொதித்துக் கொண்டிருக்கும் தீக்குழம்பென்பதே விஞ்ஞானத்தின் முடிவு. பூமியில் நின்று சூரியனைப் பார்த்தால் சூரியன் கொதித்துக் கொண்டிருக்கம் குழம்பாகத் தெரிவதில்லை.தகதகத்துக் கொண்டிருக்கம் வெள்ளித்தகடாவே தெரியும். இந்த நிலைமைதான் சூரியக் குடும்பகத்திற்கு அப்பாலுள்ள இயக்கும் சக்திகளுக்கும் இருக்கும்.

பிரபஞ்சத்தில் இன்னும் பல கோள்களில் உயிரனங்கள் வாழ்வதற்கு தேவையான சக்தியைக் கொடுப்பதற்கு அவற்றிக்கென்று சூரியன் போன்ற கோள்கள் இருக்கின்றன. ஆனால் அவை சூரியனைப் போன்ற சிவப்பாக இருக்கும் இருக்கத்தான் வேண்டும் என்பதும் இல்லை.

அந்தச் சக்தி கொடுக்கம் கோள்கள் வேறு நிறங்களில்கூட இருக்கும்.அந்தப் பிரகாசம் அல்லது வெளிச்சம் நீலநிற பிரகாசமாகவோ, பச்சைநிறப் பிரகாசமாகவோ அல்லது வேறுநிறப் பிரகாசமாகவோ அந்தப்பிரகாசம் வெப்பநிலையைக் கொண்டதாகக்கூட இருக்கும்.

சூரியனிலிருந்து கிடைக்கும் வெப்பமே பிரணாவாயு எனும் உயிர்முச்சிற்கு காரணமாகவிருக்கின்றது. அதே போல் வேறுபல கோள்களில் வாழும் உயிரினங்கள் பிராணவாயுவைத்தான் சுவாசிப்பவை என்று சொல்லிவிட முடியாது. ஆவற்றின் உருவங்களும் மனிதர் உட்பட பூமியில் வாழும் உயிரினங்கள் போன்றுதான் இருக்கும் என்றும் கூறிவிட முடியாது.

அந்த உயிரினங்கள் வேறுவகையான உடலமைப்பையும் வேறுவகையான உயிர்வாயுவை சுவாசிப்பவையாகவும் சிலசமயம் தமக்கு சக்தி தரும் கோளிலிருந்து புறப்படும் ஒளிக்கதிர்களினா லோ உயிர்வாழ்பவையாகக்கூட இருக்கலாம்.
எவ்வளவு அகலம் எவ்வளவு நீலம் அதன் ஆரம்பம் என்ன முடிவு என்ன என்பதைச் சிந்திக்க முடியாத இந்தப் பிரபஞ்சத்தை இன்றைய விஞ்ஞானத்தால் மட்டு மல்ல எந்த விஞ்ஞானத்தாலும் முழுமையாக அளந்து கண்டறியவே முடியாது.

விஞ்ஞானம் தனது பிரபஞ்சப் பயணத்தை நீட்டிக் கொண்டு போனால் பிரபஞ்சம் நீண்டு கொண்டு தான் போகும். மனிதர்கள் திசையைக் கணித்தது போல் பிரபஞ்சத்தின் எந்த முனையை திசைகள் என்பதும் மேல் கீழ் என்பதையும் அறிய முடியாது.
பூமித்தரையில் நிற்கும் மனிதன் தான் நிற்கும் இடத்திலிருந்து திசையைக் கூறுகின்றான். ஒரு மாடிக் கட்டிடத்திலிருந்து தனது தலைக்கு மேலே இருக்கும் பகுதியை மேல் என்றும் தனது காலுக்கு கீழ் இருக்கும் பகுதியை கீழ் என்றும் கூறுகின்றான். ஆனால் பிரபஞ்சத்தில் இது முடியவே முடியாது.

மர்மமும் வியப்பும் மிகுந்த பிரபஞ்சத்தில் கோடிக்கண்கான கோள் மிதந்து கொண்டிருக்கின்றன என்பதும் அவற்றில் உயிரினங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதும் அந்த உயிரினங்கள் எல்லாம் ஏலியன்ஸ் போன்ற உருவ அமைப்பை கொண்டவையாத்தான் இருக்கும் என்றும் சொல்லிவிட முடியாது. அந்த உயிரினங்கள் மனிதர்களைவிட ஆற்றல் மிகுந்தவர்களாகவும் வெறு வகையான உடல் வடிவத்தைக் கொண்டவர்களாகக் கூட இருக்கலாம்.

நாம் எம்மை ஒருசில விநாடிகள் மறந்துவிட்டு எம்மிலிருந்து தூர விலகி நின்று வேறு ஒரு கோளிலிருந்து வந்தவர்களாக எம்மை கற்பனை செய்து கொண்டு பூமியில் உள்ள மனிதர்களைப் பார்ப்பாமானால் எமது உடலையும் உடல் உறுப்புக்களையும் கற்பனை செய்து வேறுபடுத்தி நிற்கும் எமக்கு மனிதர்களின் உடல் விசித்திர மானதாகவே தோன்றும்.

**கோள்கள்**

சூரியக்குடும்பத்தில் உள்ள கோள்கள் சூரியனிலிருந்து புறப்பட்ட தீக்குழம்புத் திரட்சிகள்தான் என்பதை விஞ்ஞானம் நிறுவியுள்ளது. அதனடிப்படையில் பார்க்கும் போதுதான் இந்தக் கோள்களுக்குள் பூமிக்கு அளவான வெப்பம் கிடைத்துக் கொண்டிருப்பதாலேயே பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கும் அவை உயிர் வாழ்வதற்கும் காரணமாகவிருக்கின்றன.

சூரியனுக்கு அண்மையில் இருக்கும் கோள்கள் சூரியனின் மிகையான வெப்ப வலயத்திற்குள்ளிருப்பதால் உயிர்கள் வாழ்வதற்குரிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பது விஞ்ஞானத்தின் முடிவு. அதே போன்று சூரியனிலிருந்து அதிக தூரத்திலிருக்கும் கோள்கள் உறைபனிக் குளிரில் இருப்பதால் அங்கும் உயிர்கள் வாழ்வதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை என்பதும் விஞ்ஞானத்தின் முடிவு.

ஆனால் இந்த முடிவுகள் இறுதியான முடிவாக இருப்பதில்லை. விஞ்ஞானம் எப்பொழுதும் ஒரே பரிமாணத்தில் இருப்பதில்லை.
அது தனது முடிவுகளிலிருந்து இன்னொரு பரிமாணத்தை நோக்கி ஆராய்ச்சி செய்து புதிய புதிய தகவல் களை கோள்கள் சம்பந்தமாக வெளிட்டு வருகின்றன. இவை இன்னும் தொடருகின்றன.

விஞ்ஞானிகளால் கோள்கள் பற்றி அவதானிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட விண்கலங்கள் கோள்களைப் பற்றி தகவல்களை திரட்டி வருகின்றன.
ஆனால் அவை திரட்டிய தகவல்கள் கோள்களைப் பற்றிய முழுத்தகவல்களையும் கொண்டதாக இருப்பதில்லை.

தொடர்ச்சி 26ம் பக்கம்

Nirubagini Magendiran
மொழிபெயர்ப்பாளர்
Tamil- Deutsch
Deutsch- TamilTel: 0176/ 24012135
Email:
nirumagendiran@hotmail.com
தமிழ்
யேர்மன்
யேர்மன்
தமிழ்
Vereidigte Dolmetscherin
und
ermächtigte Übersetzerin

INDO AFRO TRAVELS
Mit uns um die Welt
தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்
Tel:0621 86 24 32 12
Handy:0173 68 28 990
Fax:0621 86 24 32 14
e.mail info@indo-afro.de
S.1-11
68161 Mannheim
S.J. Enterprises
S.1-11
68161 Mannheim
கோடைகால விடுமுறையை
இதமாகக் கழித்திட
இன்றே உங்கள் விமானப் பயணத்திற்கு
எம்மை நாடுங்கள்
யேர்மனியில் Manheim நகரில்
S.J.Asian-Afro Store
Schulstraße7-9
67059 Ludwigshafen

# ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளின் 12வது அலங்கார உற்சவ தேர்த்திருவிழா







தேர்.11.08.2013



தேர் வெள்ளோட்டம்10.08.2013

யேர்மனி சுவெற்றா ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளின் 12வது அலங்கார உற்சவ தேர்த்திருவிழா 11.8.2013 அன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச் சிறப்பாக நடைபெற்றது. பகல் 11.30 மணியளவில் பல தவில் நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியுடன் பக்தர்களின் அரோகரா கோஷத்துடனும் சர்வஅலங்கார பூஜிதையாக கனகதுர்கா அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப் பெருமானுடன் உள்வீதிவலம் வந்து தேரில் ஏறி சுவெட்றா நகர் வீதிகளில் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் வண்ணம் அன்னை தேரில் வீதிவலம் வந்த காட்சி எல்லோருடைய மனங்களிலும் நீங்காத இடம்பெற்றிருந்தது. பக்தர்களின் கற்பூரச்சட்டி ஏற்படுத்திய புகை வான் மண்டலத்தை கறுப்பாக மாற்றுவதுபோல் அமைந்திருந்ததையும். அம்பாள் தனது புதிய தேரில் வீதியுலா வந்த காட்சியும், முதல் முதலாக தேருடன் பக்தரின் ஆட்டக் காவடியும், நெஞ்சைவிட்டகலா நினைவுகள். தகவல்:ஆன்மீகத்தென்றல்.த.புவனேந்திரன்.

25ம் பக்கத் தொடர்ச்ச்சி

## கேள்வியாயும் ....

சூரியனுக்கு அண்மித்த கோள்கள் தொடர்ச்சியாக சூரியனுக்கு அருகிலேதான் இருந்தவை என்று சொல்வதற்கில்லை. அதே போல்தான் சூரியனை விட்டு விலகி அதிக தூரத்தில் உறைபனியில் உறைந்திருக்கும் கோள்களும் தொடர்ச்சியாக அதிக தூரத்திலேயே இருந்தனவென்றம் சொல்வதற்கில்லை.

சூரியனுக்கருகில் இருந்த கோள்கள் அதிக தூரத்திற்கும் அதிக தூரத்தில் இருந்தவை சூரியனுக்கருகிலும் எண்ணிறந்த கோடி ஆண்டு களுக்கு முன்பே கோள்களின் ஈர்ப்பு விசையினால் இடம்மாறியதற்கான வாய்ப்புகளுண்டு.

பூமிகூட இந்த வகையில்தான் இடம்மாறி வந்திருக் கலாம். எந்தவொரு உயிரும் வாழத்தகுத ியற்றதாக இருந்த பூமி உயிர்கள் தோன்று வதற்குரிய கோளாக பலகோடி ஆண்டுகளுக்குப் பிறகு மாறியுள்ளது போன்றுதான் உயிர்கள் வாழ்ந்த கோள்கள் இடம்மாறிய காரணத்தால் அங்கு வாழ்ந்த உயிர்கள் அழிந்திருக்கலாம். இந்தக் கோள்களில் பூமியில் இருக்கின்ற மனிதர் உட்பட உயிரினங்கள் போன்றுதான் இருந்தன என்றில்லை.

அவை மனிதர்களைவிட விலங்குகளைவிட பெரியனவையாகவோ அல்லது மிகச் சிறியனவை யாகக்கூட இருந்திருக்கலாம். அந்த உயிரினங்கள் அழிந்து பல கோடி ஆண்டுகளாகியிருக்கலாம். எனவே கோள்கள் பல கோடி ஆண்டுகளுக் கொருமுறை தமது இருப்பிடத்தை நகரத்தியதால் அந்தந்த கோள்கள் பெற்று வந்த தட்பவெட்பம் மாறியதால் உயிரினங்களும் மரம் செடி கொடிகளும் அழிந்திருக்க வாய்ப்புண்டு.

பிரபஞ்சம் எல்லையற்றது என்பதும் கோடிக் கணக்கான கோள்கள் நட்சத்திரங்கள் அங்கே மிதந்து கொண்டிருக்கின்றன என்பதை நாளுக்கு நாள் அண்டவெளி பற்றிய புதிய அறிதல் நிரூபித்து வருகின்றன. பல கோள்கள், அக்கோள்களில் உயிரினங்கள் வாழ்வதற்கான வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய கோள்கள் இருக்கின்றன என்பதை நாளுக்கு நாள் விஞ்ஞானிகள் கண்டு பிடித்து வருகினன்றனர்.

அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்

Sweet Chilli

www.sweetchilli-do.de

Original Srilankisches & Indisches Restaurant
50 Sitzplätze
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter

இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள்,அனைத்தும் ஒரே கூரையின் கீழ் .தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

Tel: 0231 315 46 84
Rheinische str.60
44137 Dortmund

Herzlich Willkommen!
Buffet & Party Service



Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013




அவுஸ்ரேலியா **எஸ். கிருஷ்ணமூர்த்தி**

நாதனது கன நாள் ஆசை இப்போதுதான் நிறைவேறியுள்ளது. அவுஸ்திலேயாவில் காணி வாங்கி பெரிய மாடி வீடு கட்டு வேண்டும் என்பது அவனது இலட்சியம். அவனும் மனைவியும் மாறி மாறி உறக்கமின்றி கடுமையாக உழைத்து காசு சேமித்து நிலம் வாங்கி அதில் ஒரு அழகிய பெரிய மாடி வீடொன்று கட்டிவித்தான். வீட்டைக் கட்டிப் போட்டு சும்மா இருந்தால் அதில் என்ன சுகம் இருக்கிறது. நாலு சனம் வந்து வீட்டைப் பார்த்தால் தானே கஸ்டப்பட்டதன் பலன் கிடைக்கும். பார்த்த நாலு சனம் பார்க்காத நாலு சனத்திற்க்கு சொல்ல அந்த பார்க்காத நாலு சனம் இன்னும் பத்துப் பேருக்கு சொல்ல நாதனது வீட்டைப் பற்றிய நியூஸ் கொஞ்ச நாளாவது மெல்பேண் தமிழ் சனத்துக்குள்ளே பரபரப்பாக உலாவும்.

வீடுகுடிபூர்வை என்று யாழ்பாணத்து பாசையில் சொல்லப்படும், கிரஹப்பிரவேசத்திற்கு நண்பர்களை அழைத்து விருந்துவைப்பதில் நாதனுக்கு உடன்பாடு இல்லை. ஊரிலை சிம்பிளாக பால் காச்சி வீட்டைச் சுற்றி பாலைத் தெளித்தால் விசயம் முடிந்துவிடும். இங்கை அப்படியில்லை. ஐயர் தனது வித்தையைக் காட்டுவதற்காக ஊரிலை கேள்விப்படாத புது புது நடைமுறைகளை கொண்டு வருவார். அதனால் ஐயருடைய கைக்கை எப்பவும் நிற்கவேணும்.

வருகிற நண்பர்களுக்கு வீட்டைச் சுற்றிக்காட்டி பெருமையடிக்கமுடியாது. வேறு ஒருநாளில் ஹோம் வெல்கம் என்றோ கெற்றுக் கெதர் என்றோ அழைத்து விருந்து வைக்கலாம். இதிலும் ஒரு சூட்சுமம் இருக்குது. எல்லாரையும் ஒரே தடவை அழைக்கக் கூடாது. இரண்டு மூன்று குடும்பங்களாக கூப்பிடலாம். அப்பதான் வீட்டு விற்பனை முகவரைப் போல ஒவ்வொரு அறை அறையாக காட்டி விளக்கம் கொடுக்கலாம். இப்படியே நாலைத்து கிழமை இழுத்தடித்தால் நாதனது புதுவீட்டு நியூஸ் கொஞ்சக்காலம் கூட ஓடும்.

இந்தச் சனி இரவு, குலம் குடும்பம், சிவா குடும்பம், பால குடும்பம் ஆகியோருக்கு இராப்போசனம் விருந்து. மூன்று குடும்பமும் சொல்லி வைத்தது போல ஒரே நேரத்தில் காரில் வந்து இறங்கினார்கள். நாதனது மனைவி நளினி விசயகாரி வருகிற ஒவ்வொரிடமும் ஒரு கறி சமைத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டாள். ஆதனால் அவர்களது கைகளில் ஒவ்வொரு கறிச்சட்டி. நளினி அதை வாங்கி கிச்சின் மேசையில் வைத்து விட்டு மூன்று பெண்களையும் பமிலி றூமுக்கு அழைத்தாள். நாதன் ஆண்கள் மூவரையும் முன்னாள் உள்ள விருந்தினர் அறைக்குக் கூட்டிச்சென்றான். அங்கேயுள்ள கோப்பி ரேபிலில் விஸ்கிப் போத்திலும் கொறிப்புத் தீனியும் இருந்தன.

நாதன் விஸ்கிப் போத்தலை சுட்டிக் காட்டி "தொடங்குங்கோவன்" என்றான். சிவாவோ " இதுக்கு இப்ப என்ன அவசரம். முதலில் வந்த விசயத்தை முடிப்பம். வீட்டைச் சுற்றிக் காட்டன்."

"அதுவும் சரிதான், போதையேறினால் வீட்டை சரியாகப் பார்க்க முடியாது." இது பாலா.

" வடிவாகப் பாத்தால்த்தானே வெளிலை போய் மற்றவரிடம் நொட்டை நொறுக்குச் சொல்லலாம்." கடுந்தொனியில் நாதன்.

" என்ன நீ மில்லியன் டொலரிலை வீடு கட்ட நாங்கள் என்ன குறைகண்டு பிடிக்கவா வந்தனாங்கள். வா பார்ப்பம்." என்ற படி எழுந்தான் குலம்.

நளினி கிச்சினை பெண்களுக்கு காட்டிக்கொண்டிருந்தாள். கிச்சினுக்குள்ளை போன பெண்கள் கிச்சின் ஆராய்ச்சியை இப்போதைக்கு முடிக்க மாட்டினம் என்று உணர்ந்த நாதன். மேல்மாடிக்கு மூவரையும் அழைத்துச் சென்றான்.

அப்போது நாதனது ஐபோனில் ஒரு மெசேச் வந்தது அதைப் பார்த்து விட்டு, "ஒரு நிமிடம் பொறுங்கோ, சஞ்சய் நாளைக்கு என்ற காசுவேணுமாம்" என்று கூறினான்.

சஞ்சயன் நாதனது ஒரே ஒரு பிள்ளை வயது இருபது. யூனியில் படிக்கிறான். நாதன் தனது ஐபோனில் தனது எக்கவுண்டிலிருந்து மகனது எக்கவுண்டுக்கு காசை மாற்றினான். "சஞ்சை என்ன வீட்டில் இல்லையா?." சிவா கேட்டான்.

"இல்லை, மேலே மாடியில் தான் இருக்கிறான். கீழே வாறது இல்லை. எங்களாலும் அடிக்கடி படியேறி மேலே போக ஏலாது. எங்கள் மூவரிடமும் லேற்றர் ஐபோன் இருப்பதால் மகன் சஞ்சை வீட்டில் இருந்தாலும் மகன் சஞ்சையுடன் போனில்த் தான் தொடர்பு கொள்ளுவோம்." என்றான் நாதன் பெருமையுடன்.

மேலே மூவரையும் அழைத்துக் கொண்டு போய் காண்பித்துக் கொண்டிருந்தான் நாதன். ஒரு பெரிய அறை. சுவரில் ஒரு எல் சிடி ரெலிவிசன் பொரித்தியுள்ளது. அதற்கு கீழே இரண்டு கதிரைகளுடன் வட்டமான சிறிய மேசை. அதற்குள்ளேயே ரொயிலற்றுடன் கூடிய ஸ்பா பாத் அழகிய பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது.

"இது எங்களது மாஸ்ர பெட்றூம், ஒன் சுவிற்றுடன். ஆனால் நாங்கள் இப்போது இங்கே தங்குவதும் கிடையாது வருவதுமில்லை. கீழே ஒரு றூம் இருக்கு அதில்தான் படுப்போம்." என்றான் நாதன்.

சிவா கூர்ந்து பாத்துவிட்டு "ஞாபகமிருக்கா நாதன். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நீங்கள் தங்கியிருந்த பிளட் இந்த றூமின் பாதியாகத்தான் இருந்தது" என்றான்.

" என்ன குத்திக்காட்டுகிறாயா? ஊரிலை கொட்டில் வீட்டில் இருந்ததுகள் எல்லாம் இப்ப மில்லியன் டொலர் வீடு வேண்டியிருக்கு என்று சிலர் சொல்வதும் எனது காதில் விழுந்திருக்கு" என்றான் நாதன்.

"சரி, உதுகளை விட்டுத்தள்ளு, மற்ற றூம்களைக் காட்டு." என்று கதையை மாற்றினான் குலம்.

ஓவ்வொரு றூமாக பார்த்தபடி வந்தனர். ஒரு றூமை சுட்டிக் காட்டி இது சஞ்சயனது என்று சொன்னபடி றூம் கதவைத் தட்டி விட்டு திறந்தான் நாதன். சஞ்சயன் கட்டிலில் இருந்தபடி லெப் டொப்பில் எதையோ நோண்டிய படி இருந்தான். இவர்களை கண்ட சஞ்சயன், "ஹாய் அங்கிள்ஸ்." என்று விட்டு திரும்பவும் லெட்டொப்பில் நோண்டினான். மேல்மாடியை பார்த்து விட்டு கீழே நால்வரும் இறங்கியவாறு, "இப்ப இந்தக் காலத்துச் சிறுசுகள் எல்லாம் பேஸ் புக்கிலை எந்த நேரத்திலும், இதாலை பல பிரச்சினை வருது." என்றான் பாலா.



## இன்சுலின் அளவை சீராக வைப்பதற்கான இயற்கை வழி!!!

இன்சுலின் என்பது கணையத்தில் சுரக்கப்படும் ஒரு ஹார்மோன். இந்த ஹார்மோன் தான் உடலில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துகிறது. ஆனால் இந்த இன்சுலினானது குறைய ஆரம்பித்தால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவானது அதிகரித்து, நீரிழிவு நோயை ஏற்படுத்திவிடும்.

ஆகவே உடலில் நீரிழிவு நோயானது தாக்காமல் இருக்க வேண்டுமெனில், இன்சுலினின் அளவை சீராக பராமரிக்க வேண்டும்.

வெண்டைக்காய் இரவில் படுக்கும் போது வெண்டைக்காயை நீரில் நறுக்கி போட்டு, காலையில் எழுந்து அந்த நீரைப் பருகினால், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறைவதோடு, இன்சுலின் குறைபாடும் நீங்கும்.


ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக!
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

**E.S.T.M Jewellery & Schmuck**

நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள், யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்களும் செய்து கொடுக்கப்படும். பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

Rheinische Str.73
44137 Dortmund

உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்
Handy:01633642642






27ம் பக்கத் தொடர்ச்சி.




" சிறுசுகளைச் சொல்லிக் குற்றமில்லை. பெரிசுகளும் எந்த நேரத்திலும் பேஸ்புக்கிருக்கிறார்கள் இதாலும் பிரச்சனைதான்." என்று குலம் கூறினான்.

உடனே தனது ஐபோனை எடுத்து, தனது பேஸ் புக் எக்கவுண்டைத் திறந்து காட்டினான்.

"இதைப் பாருங்கள், நானும் பேஸ் புக் வைத்திருக்கிறேன். எனது மகன் சஞ்சையுடனும் இணைந்திருக்கிறன்." என்றான் நாதன்.

அதற்கு சிவா, பாலாவிற்கு கண்ணால் ஒரு சைகை காட்டிவிட்டு சொன்னான்.

" பேஸ்புக் மட்டுமல்ல, பேஸ்புக் போல டுவிற்றர், இன்ஸ்ராகிராம் என்று பலவகைகள் இருக்கின்றன. எமது பிள்ளைகள் சரியான சிமாட். எங்களைத் திசைதிருப்புவதற்காக எங்களுடன் பேஸ்புக்கிலை இணைந்து விட்டு, இன்ஸ்ராகிராம் போன்றவற்றில் தங்கடை விளையாட்டைக் காட்டுவினம். ஏதற்கும் கவனமாகக் கண்காணிக்க வேணும்."
"இன்ஸ்ராகிராமா? நான் கேள்விப்படலை" ஆச்சரியத்துடன் நாதன்.

அப்போது நாதனது ஐபோன் சினுக்கியது. அவனது மனைவி நளினி சமையல் அறைக்குள் இருந்து போன் எடுத்தாள். புதிதாக வாங்கின குளிர்சாதனப் பெட்டியைப் பற்றி விளக்கம் கேட்டாள். நண்பர்களை ஆறுதலாக பார்த்துக் கொண்டு வரும்படி கூறி விட்டு அவசரமாகப் படி இறங்கி ஓடினான்.

நாதன் போனதும் சிவா தாழ்ந்த குரலில் "செல் போன் கண்டு பிடிக்காவிட்டால் இவர்கள் பாடு பெரும் திண்டாட்டம்தான். நாதனின் மகன் சஞ்சய்ன் ஒரு கேள் பிரண் வைத்திருக்கிறான். சீனக்காரி, இருவரும் மோசமாக போடடோ எடுத்து இன்ஸ்கிராமில் போட்டிருக்கிறார்கள். எனது மகன்தான் காட்டினான். நாதன் ஏதோ தனது மகன் தன்னைர கொன்றோல்லைதான் என்று நினைக்கிறான். என்னை மகன் இவனோடை ஏதோ பிரச்சனை எண்டு நினைக்கிறன். அதாலை விசயத்தை எனக்கு புட்டு வைத்தான்." என்றான்

"நாங்கள் ஏன் மற்றவையின்ரை பிரச்சனைக்குள் அதிகம் நுழைவான். எங்களுடைய பிள்ளைகள் என்ன செய்யுதுகள் என எங்களைத் தவிர மற்றவைகளுக்குத்தான் அதிகம் தெரியும்." என்று எப்போதும் சச்சரவைத் தவிர்க்க விரும்பும் குலம் கூறினான்.

விருந்து முடிந்து இரண்டு கிழமையின் பின்னர் ஒரு நாள் இரவு நாதன் வீட்டு அழைப்பு மணி தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது. நாதன் எழுந்து நேரத்தைப் பார்த்தான். நள்ளிரவு பன்னிரண்டைத்தாண்டியிருந்தது. இந்த நேரத்தில் யார் என எண்ணியபடி எழுந்தான். ஆனால் அழைப்பு மணி விடாது அடித்துக் கொண்டேயிருந்தது. யன்னலூடாக யார் பெல் அடிப்பது எனப்பார்த்தான். வெளியே இரண்டு பொலிஸ்காரர்கள் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். அவசரமாக கதவைத் திறந்தான். தொந்தரவுக்கு மன்னிப்பு கேட்டு விட்டு, "சஞ்சையனுக்கும் அவனது கேள்பிரண்டுக்கும் ஏதோ சண்டை,சஞ்சையன் அவளுக்கு அடித்து விட்டான். இருவரையும் விசாரிக்க வேணும்" என்றான் பொலிஸ்காரனில் ஒருவன்.
"சஞ்சயன் மேல்மாடியில்தான் இருக்கிறான். ஆனால் அவனுக்கு கேள் பிரண்டே கிடையாது" என்றாள் நாதனது மனைவி நளினி. இல்லை இருவரும் ஒன்றாகத்தான் இரு மதங்களாக இங்கே தங்கியுள்ளனர்" என உறுதியாகச் சொன்னான் அந்த பொலிஸ் காரர்.
அப்போது ஒரு சீனக்காரியும் சஞ்சையனும் மாடிப் படியாலே இறங்கிவந்து கொண்டிருந்தனர்.

அதைப் பார்த்த நாதனுக்கும் நளினிக்கும் தலை சுற்றியது. அவர்கள் வேறோர் உலகத்தில் இருப்பது போல் உணர்ந்தனர்.

# நிலாவரை வற்றாத கேணி ஆழம் கண்டாச்சு!




நிலாவரை வற்றாத கேணி ஆழம் காணமுடியாதது எனக்கூறப்பட்ட போதும் அதன் ஆழம் ஏற்க்கனவே அறியப்பட்டுவிட்டது என்பது பலர் அறியாத விடயம் ஆகும். இது 50 அடி நீளமும் 40 அடி அகலமும் **164 1/2** அடி ஆழமும் கொண்டது. கடல் மட்டத்தில் இருந்து 0.2ஆழத்தில் நீரை கொண்டுள்ளது. மேற்ப்பரப்பில் இருந்து 50 அடி ஆழம் வரை நன்னீர் உள்ளது. 50 முதல் 80 அடிவரையான ஆழத்தில் சவர் நீரும் 80 முதல் 130 அடி ஆழம் வரை கடல் நீரையொத்த உப்பு நீரும் காணப்படுகின்றது . 130அடியின் கீழ் கடல்நீரை விட காரமான உப்பு நீர் காப்படுகின்றது.



## அங்கும் இங்கும்

# "காலம் காட்டும் கல்"

ரோமனியர் காலத்து நேரம்பார்க்கும் கல் ஒன்று துருக்கியில் உள்ளது.இக்கல் கி.மு.200 ஆண்டுகள் பழமையானது. இதுபோன்ற கற்கள் தமிழகத்திலும் இருந்துள்ளது.

தமிழன் சூரியனை வைத்து கடிகாரம் கண்டுபிடித்து பயன்படுத்தினான்.
அறிவியல் வளராத காலத்திலையே சூரியனை எப்படி பயன்படுத்தலாம் என்று யோசித்தவன் தமிழன்.
இந்தக் கல்கடிகாரத்தைப் பற்றிச் சில:

வேலூர் அருகே விரிஞ்சிபுரம் என்ற தலத்தில் உள்ளது வழித்துணைநாதர் ∴ மார்கபந்தீஸ்வரர் கோயில். கோயிலின் உள்ளே தென்புறத்தில், "காலம் காட்டும் கல்" இருக்கிறது. அர்த்த சந்திரவடிவில் 1 முதல் 6 வரையும், 6 முதல் 12 வரையும் எண்கள் அந்த கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. மேற்புறம் உள்ள பள்ளத்தின் வழியே ஒரு குச்சியை நீட்டினால், குச்சியின் நிழல் எந்த எண்ணின் மீது விழுகிறதோ அதுதான் அப்போதைய நேரம் என்று அறிந்து கொள்ளலாம்






# உடல் மற்றும் மன நிலையை எடுத்துக் காட்டும் கருவளையம்!

வாணிஸ்ரீ சிவகுமார்



பாதுவாக கண்களைச் சுற்றியுள்ள பகுதியானது மிகவும் மிருதுவான அதிக கவனம் செலுத்த வேண்டிய சருமமாக உள்ளது. இதனை காக்க அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

உறக்கமின்மை, மனக்கவலை, மகிழ்ச்சி, உடல் நலக் குறைவு, சோர்வு, மன அழுத்தம் என பல விஷயங்களை இந்த கருவளையம் காட்டிக் கொடுத்துவிடும்.

இது மட்டுமல்லாமல், பரம்பரை ரீதியாகவும், சத்துக் குறைவாலும் இந்த கருவளையம் ஏற்படுகிறது. எனவே ஒருவருக்கு கருவளையம் எதனால் ஏற்பட்டது என்று கண்டறிந்து அதன் மூலமாகத்தான் கருவளையத்தைப் போக்க வேண்டுமே ஒழிய, வெறும் கருவளையத்தைப் போக்க சிகிச்சை பெறுவது எந்த வகையிலும் பலன் தராது.



## நல்ல உறக்கம் பல நோய்களுக்கு மருந்தாகலாம்!

சிலருக்கு பரம்பரை ரீதியாகவே கருவளையம் ஏற்படலாம். அவ்வாறான வர்கள், சில முயற்சிகள் செய்வதால் ஓரளவுக்கு அதனை கட்டுப்படுத்தலாம். முழுவதுமாக போனாலும், அது மீண்டும் வருவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

உறக்கமின்மை காரணமாக சிலருக்கு கருவளையம் ஏற்படுகிறது. இது

அவ்வப்போது வந்து, பின்பு மறைந்துவிடும். இதற்கு எந்த சிகிச்சையும் தேவையில்லை. நன்கு உறங்கினாலே போதுமானது. உறக்கம் குறையும் போது உருவாகும் கருவளையமானது, உங்களது உடல்நிலை எடுத்துக் காட்டும் கண்ணாடியாகவும் அமைகிறது.

சிலருக்கு சத்துக் குறைவால், கண்களுக்கு அருகே உள்ள சருமம் சுருங்கி அதனால் கருவளையம் தோன்றுகிறது. இதனை போக்க நல்ல சத்தான உணவுகளை சாப்பிட வேண்டும். புரதமம், நார்ச்சத்து, கொழுப்புச் சத்துள்ள உணவுகளை சாப்பிட்டு வந்தால் தானாகவே இந்த கருவளையும் மறைந்து விடும்.

சிலருக்கு அதிகப்படியான பணி பளுவால் கருவளையம் ஏற்படுகிறது. அதிக நேரம் கணினி முன் அமர்ந்து பணியாற்றுபவர்கள், அதிக நேரம் கண் விழித்து வேலை செய்பவர்கள் அல்லது படிப்பவர்கள், தொடர்ந்து டிவி பார்ப்பவர்களுக்கும் இந்த கருவளையம் ஏற்படுகிறது.

எனவே, கண்களுக்கு அதிகப்படியான அழுத்தம் கொடுப்பதை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இது மட்டுமல்லாமல், அதிக உடல் உழைப்பும், டென்ஷனும் கூட கருவளையத்தை ஏற்படுத்தலாம். வீட்டில் அனைத்து வேலைகளையும் ஒருவரே செய்யாமல், வேலைகளை பகிர்ந்து கொள்வதால், வேலை பளு குறையும், எனவே எல்லா வேலைகளையும் ஒருவரே செய்ய வேண்டும் என்று எண்ணாமல் வேலைகளை பகிர்ந்து கொள்ளுங்கள் அல்லது பகிர்ந்து அளியுங்கள்.

சிலருக்கு ரத்த சோகை காரணமாகவும் கருவளையம் ஏற்படுகிறது. இரும்புச் சத்துள்ள உணவுகளையும், ரத்தத்தை அதிகரிக்க உதவும் காய்கறிகளையும் அதிகம் சாப்பிட்டு ரத்த சோகையை சரி செய்தால், இநத் கருவளையமும் தானாகவே மறைந்துவிடும். கீரை, நெல்லிக்காய், பீட்ரூட், நாவல்பழம் போன்றவற்றில் இரும்புச் சத்து உள்ளது.

எனவே, கருவளையம் வந்து விட்டதே என்று எண்ணி அதற்காக பல க்ரீம்களை போட்டு மன உளைச்சலுக்கு ஆளாகாமல், முதலில் எதனால் கருவளையம் வந்தது என்று கண்டறிந்து அதனை குணப்படுத்த முயலுங்கள். கருவளையம் தானாகவே சரியாகிவிடும்.


வெற்றிமணி விழா

டோட்முண்ட் நகரில்

14.09.2013

சனிக்கிழமை

காணத் தயாராகுங்கள்








யேர்மனியில் பிராங்பேட் நகரில்...

Jaffna Basar

ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்த நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்

Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main

உரிமையாளர் நடராஜா சுதன்

Tel: 069 25 62 63 53

யேர்மனியில் முல்கைம் நகரில்...

Jaffna Basar

இல்லத்திற்கு வேண்டிய மளிகைப்
பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.

தொலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்

அனைத்திற்கும் நாடுங்கள்

Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany

Tel:02086 96 64 85
Tel:01787633084

# நயன்தாராவை விட்டு விலகாத பிரபு!



பிரபுதேவாவை விட்டு நயனதாரா விலகி விட்டாலும் கூட அவரது கையிலிருந்து இன்னும் போகாமல் அடம் பிடிக்கிறாராம் பிரபுதேவா... அதுதான் நயனதாரா தனது கையில் குத்தியுள்ள பிரபு என்ற பெயர் கொண்ட பச்சைதான் அந்த பிரபுதேவா. எங்கு போனாலும் இந்த பச்சையும் கூடவே ஒட்டிக் கொண்டு வருவதால், நயனதாராவைப் பார்ப்பதை விட இந்த பச்சை குத்திய கையைத்தான் அத்தனை பேரும் கண் கொத்திப் பாம்பாக பார்த்து ரசிக்கிறார்களாம். எவ்வளவோ செய்தும் கூட இந்த பச்சையை மட்டும் நீக்க முடியவில்லையாம் நயனதாரா.

சென்னை பட விழாவில் பச்சையுடன் சென்னையில் ஜெயா பாலாஜி ரியல் மீடியா நிறுவனத்தின் புதிய படத் தொடக்க விழாவுக்கு நயனதாரா வந்திருந்தார். நீளமான கை உடைய ஆடையில் அவர் வந்திருந்தாலும் கூட பச்சை அவ்வப்போது எட்டிப் பார்த்தபடியே இருந்தது.

இடது கை இம்சை தனது இடது கையில் பிரபு என்ற பெயரை பச்சைக் குத்தியுள்ளார் நயனதாரா.

காதலில் கசிந்துருகி... கையில் பச்சை குத்தி அப்போது பிரபுதேவாவுடன் படு நெருக்கமான காதலில் கசிந்துருகிப் போய்க் கிடந்தார் நயனதாரா. அதனால் குத்திய பச்சைதான் இது.

போக மாட்டேங்குறியே பிரபு... இப்போது பிரபு தேவாவை விட்டு முழுமையாக நீங்கி விட்டார் நயனதாரா. ஆனால் அவரது பெயரைத் தாங்கிய கையைத்தான் மறைக்க முடியாமல் திணறி வருகிறாராம்.

கோபிசந்த் பட விழாவில் கோபிசந்த்துடன் இணைந்து நடிக்கும் புதிய படத்திற்கான பூஜை ஏவிஎம் பிள்ளையார் கோவிலில் நடந்தது. அதில் நயனதாரா கலந்து கொண்டார். கண் முழுவதும் நயன் கையில் அதில் கலந்து கொண்டவர்கள் அத்தனை பேரும் நயனதாராவின் கையில் பளிச்சென தெரிந்த பிரபு என்ற பச்சையையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மறைக்க முடியாமல் தவித்த நயன் இந்த பச்சை வெளியே தெரியாத வகையில் நீளமான கை கொண்ட உடையில்தான் வந்திருந்தார் நயனதாரா. ஆனாலும் பச்சை அவ்வப்போது பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.



## காதல் புதிது!


என் இளவரசிக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்மா: ஹன்சிகாவுக்கு சிம்பு! August 9, 2013, சென்னை: நடிகை ஹன்சிகா இன்று "22" வது பிறந்தநாளை தாம் தத்தெடுத்திருக்கும் குழந்தைகளுடன் கொண்டாடினார். அவருடைய காதலரான நடிகர் சிம்பு, தன்னுடை இளவரசிக்கு அன்பான பிறந்த நாள் வாழ்த்துகள்மா என்று ட்விட்டரில் பதிவிட்டிருக்கிறார். திரை உலகில் இப்போது பேசப்படுகிற காதல் ஜோடி சிம்பு- ஹன்சிகா. இதை இருவருமே பகிரங்கப்படுத்தியும் உள்ளனர்.

Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel

யேர்மனியில் தலைமுறை,
தலைமுறையாக
தரமான ஆசிய, ஆபிரிக்க
உணவுப் பொருட்களின்
இறக்குமதியாளர்களும், மொத்த,
சில்லறை விநியோகஸ்தர்களும்.

யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான
இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமம்மின்றி
ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு 22 வருட அனுபவமிக்க நிறுவனம்.
Tel:0231 45 96 17 / 28



சில்லறை வாடிக்கையாளர்களுக்கு
ஓர் இனிய செய்தி!

எமது நிறுவனத்தின் 22 வது ஆண்டு நிறைவான 01.01.2013 இல் இருந்து சில்லறை வாடிக்கையாளர்களும், மொத்தவிற்பனை விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளலாம். (100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும்)
மலிவு விற்பனை விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். Web :www.milinimpex.de

ஒவ்வொரு திங்களும்
உடன் மீன்கள்
எம்மிடம் கிடைக்கும்
FRISCH FISCH



Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Wuppertal நகரில்
Aue-96
42103 Wuppertal
Tel: 0202 2999 58 69

Milin Impex

Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel:02351 9742131

Mail:info@milinimpex.de

# திரை உலகம்

## "அதிரடி" எல்லாம் இல்லீங்கணா!




அடுத்தது "அதிரடி" எல்லாம் இல்லீங்கணா: விஜய் சென்னை: ஜில்லா படத்தை அடுத்து தான் நடிக்கும் படத்தின் பெயர் அதிரடி இல்லை என்று விஜய் தெரிவித்துள்ளார். விஜய்யின் தலைவா படம் பல பிரச்சனைகளைத் தாண்டி கடந்த 20ம் தேதி தமிழகத்தில் ரிலீஸ் ஆனது. விஜய் தற்போது நேசன் இயக்கத்தில் காஜல் அகர்வாலுடன் சேர்ந்து ஜில்லா படத்தில் நடித்து வருகிறார். படத்தில் விஜய் மதுரைக்கார தம்பியாக வருகிறார். இந்த படத்தை அடுத்து அவர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கிறார். இந்த படத்திற்கு அதிரடி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில் இது குறித்து விஜய் கூறுகையில், நான் ஜில்லாவை முடித்துவிட்டு முருகதாஸ் படத்தில் நடிப்பது உண்மை.என்றார்.

## அட, விஜய்க்கு கல்யாணமாகி 14 வருஷமாயிடுச்சா?

விஜய், சங்கீதா தம்பதி இன்று (25.08.2013) தங்களது 14வது திருமண நாளை கொண்டாடுகின்றனர். இளையதளபதி விஜய் தனது இளம் வயதிலேயே நடிக்க வந்துவிட்டார். அவரது பெற்றோர் அவரை டாக்டராக்க விரும்பினார்கள். ஆனால் அவர் நடிகராகிவிட்டார். தற்போது கோலிவுட்டின் முன்னணி நடிகர்களில் ஒருவராக உள்ளார். அவருக்கு தமிழகத்தில் பெரிய ரசிகர் பட்டாளமே உள்ளது.

25-8-1999 விஜய் தனது ரசிகையான இலங்கை தமிழரான சங்கீதா சொர்ணலிங்கத்தை கடந்த 1999ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி மணந்தார். ஜேசன் சஞ்சய் திருமணமான மறு ஆண்டு அதாவது 2000த்தில் விஜய்-சங்கீதா தம்பதிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு ஜேசன் சஞ்சய் என்று பெயர் வைத்தனர்.

திவ்யா சாஷா 2005ம் ஆண்டு விஜய்யின் மனைவி அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார். விஜய் தனது செல்ல மகளுக்கு திவ்யா சாஷா என்று பெயர் வைத்தார். வேட்டைக்காரன் வேட்டைக்காரன் படத்தில் அப்பா விஜய்யுடன் சேர்ந்து ஒரு பாடலில் சில ஸ்டெப்ஸ் போட்டிருப்பார் ஜேசன் சஞ்சய். டோணி மாதிரி ஜேசனுக்கு கேப்டன் டோணி போன்று பெரிய கிரிக்கெட் வீரராக ஆக வேண்டும் என்று ஆசையாம். அதனால் கிரிக்கெட் பயிற்சி பெற்று வருகிறாராம்.

மகளை காட்டவே இல்லையே விஜய் தனது மகனை படத்தில் ஆட வைத்தார், ஐபிஎல் போட்டிகளுக்கு அழைத்து வந்தார். ஆனால் மகளை மட்டும் இன்னும் காட்டவில்லையே.

## மகள்களுக்காக பிரபுதேவாவுடன் நடனம் ஆடினேன் : ஸ்ரீதேவி




சமீபத்தில் தனது 50வது பிறந்தநாளை கொண்டாடினார் நம்ம '16 வயதினிலே" மயிலு, ஸ்ரீதேவி அழகிய இரு மகள்கள், அன்பான கணவர் என பொறுப்பான குடும்பத் தலைவியாக மாறிவிட்ட ஸ்ரீதேவி கடந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் 'இங்கிலீஷ், விங்கிலீஷ்" படத்தின் மூலம் மீண்டும் திரை உலகில் அடி எடுத்து வைத்தார். சமீபத்தில் நடந்த விழா ஒன்றில் பிரபு தேவாவுடன் நடனமாடி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார் ஸ்ரீதேவி தன் மகள்களின் விருப்பத்திற்காகவே அந்த நடன அரங்கேற்றம் என தெரிவித்துள்ளார் ஸ்ரீதேவி. மேலும், அது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது...




எனக்கு வசதிப்படாது... நான் பொதுவாக விருது வழங்கும் விழாக்களில் நடனமாடுவது கிடையாது. எனக்கு அது சௌகர்யமான ஒன்றாக இருக்காது.

சின்ன மகளின் ஆர்வம்... சமீபத்தில் பிரபுதேவாவுடன் நடனமாடியது கூட என் மகள்களின் கட்டாயத்தால் தான். அதிலும் எனது இளைய மகள் நான் நடனமாடுவது குறித்து அதிக ஆர்வமாக இருந்தாள்.


ஆடலாம் பாய்ச்... சின்னதா ஒரு டான்ஸ்... நானும் 'அதென்ன பிரமாதம். ஆடினால் போயிற்று" என பிரபு தேவாவுடன் நடனம் ஆடினேன்.

அப்போ குழந்தைகள்... நான் இதுபோன்று மேடைகளில் நடனமாடுவதை பார்ப்பது இது தான் அவர்களுக்கு முதல் முறை. இதற்கு முன் நான் இது போன்று மேடைகளில் நடனமாடிய போது அவர்கள் மிகவும் சிறிய குழந்தைகள்" எனத் தெரிவித்துள்ளார்.

கணவர் அமைவதெல்லாம்.... மேலும், தன் கணவர் போனி பற்றி கூறும் போது, ' போனிஜி போன்ற கணவர் அமைய நான் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என நெகிழ்ந்து கூறியுள்ளார் ஸ்ரீதேவி.

மேலே: அன்று திரையுலகின் சிறந்த ஜோடிகளாக வலம் வந்த கமல்-ஸ்ரீதேவி இருவரும் 30 வருடங்களின் பின் ஒரு பொது நிகழ்வில் கௌரவிக்கப்படும் காட்சி.

எவ்வளவு படங்கள் அத்தனையும் வெற்றி. 16 வயதினிலே, மூன்றாம்பிறை மீண்டும்கோகிலா, வாழ்வேமாயம்,குரு. நம்மாலேயே மறக்க முடியவில்லை. அவர்களை உண்மையாகவே ஜோடியாகக் காணத் தவம் இருந்த இரசிகர்கள். இப்படி ஒரு பொருத்தம் அவர்களுக்குள். கண்களால் என்ன பேசியிருப்பார்களோ?



T.J.B Brothers ஸ்தாபனத்தின் இரண்டாவது கிளை ஸ்தாபனம்
Mönchengladbach நகரில் மனங்கவர்ந்த சேவையில்....
TJB BROTHERS
Asiatischer super markt
ஆசியா சமுத்திரம்
ஆசியா சமுத்திரம் பசுமையான மரக்கறிகள்- கடல் உணவுப் பொருட்கள் மற்றும் வீட்டுக்குத்தேயையான
Asiatischer super markt மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
Handy:0178 60 68 780
Sun TV நீண்ட நாள் பிரதிநிதிகள்
R.Ragunathan
Deutche Bank
Konto:4741153
BLZ 390 700 24
தமிழ்க்கடை
Parkhofstraße-97
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Ria Money Transfer
துரித பணமாற்றுச் சேவை
Money Transfer


19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

# LITTLE INDIA

*Textile & Jewellery*

அழகான ஆடைகளுக்கும்
பஞ்சாபி வகைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

LITTLE INDIA

02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை

# EurAsian - Tours

அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

Rishi 0174 96 44 965

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



# ASIA BAZAR

உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!

Ria Money Transfer
MoneyGram International Money Transfer

ஆசிய, ஆபிரிக்க உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை,
இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...

தீபம்

உரிமையாளர்: பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

தீபம்
தொலைக்காட்சி
அட்டைகள்
எம்மிடம் கிடைக்கும்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு



தரமும் சுவையும் தரும்...

Tel:0231- 7252859

# CEYLON IMBISS
இலங்கை உணவகம்

இலங்கை, இந்திய,
உணவுகள், தரம்
குன்றாத சுவையுடன்
கிடைக்கும்!

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



T.Mohanadas

# Jasmine Silk House

என்றும் புதியன, அழகுக்கு அழகுசேர்க்கும் அற்புதமான டிசைன்களில் அழகிய சேலைகள். மங்கையர் மனம் நாடும் பஞ்சாபிகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் அனைத்தும் நிறைவான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்



ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Tel:02102 844744

# StaR - Impex

StaR-Impex

மக்கள் ஆதரவிற்கு நன்றி

5ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

02.09.2013 முதல் 1.10.2013 வரை

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

StaR Impex Gutschein

எம்மிடம் 100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ஒரு முத்திரை பதிக்கப்படும். இவ்வாறு 10 முத்திரை நீங்கள் பெற்றபின் எம்மிடம் இருந்து 50 யூரோவிற்கான Gutschein ஒன்று வழங்கப்படும். (இச்சலுகை நேரடியாக உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே)

கடல் உணவு வகைகள் மற்றும் பசுமையான மரக்கறிகள் வாரவாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!






தரமான முத்திரை பதித்த தயாரிப்புக்களான Niru, Kings, NGR, Rabeena, Suriya, Vaani, Leela, TRS பொருட்கள் எம்மிடம் நியாயவிலையில் கிடைக்கும்!

Tel:0231 860 26 96

StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 -Tel:0231 860 26 96 E-Mail: star-impex@live.de - Web.Star-impex.net Fax: 0231/8602698


Dortmund நகரில் வெற்றிமணி விழா 14.09.2013